# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# ANNUAL PERFORMANCE REPORT
# 2018
## AIR FORCE



ශ්‍රී ලංකා ගුවන් හමුදාව
இலங்கை விமானப் படை
**SRI LANKA AIR FORCE**

# உள்ளடக்கம்


பக்க இல.

1. விமானப் படைத் தளபதியிடமிருந்தான செய்தி 03
2. முகாமைத்துவ சபையும் ஏனைய பிரதான நியமனங்களும் 04-09
3. முகாமைத்துவத் தீர்மானமும் பகுப்பாய்வும் 10
   a. இலங்கை விமானப் படை பற்றி 10
      (1) நோக்குக் கூற்று 10
      (2) பணிக் கூற்று 10
      (3) முக்கிய ஆற்றல்கள் 10
      (4) எங்கள் வகிபாகம் 11
   b. ஊழியர் கூட்டமைவும் எண்ணிக்கையும் 11
   c. இலங்கை விமானப் படையின் செயலாற்றுகை 12-13
   d. செயலாற்றுகை முகாமைத்துவத்திற்கான தந்திரோபாய வேலைச்சட்டகம் 13
   e. தந்திரோபாய இலக்குகளும் பேறுகளும் 13-18
   f. நிதி நிலைமையின் சுருக்கப் பகுப்பாய்வு 18-27
   g. உள்ளகக் கட்டுப்பாடுகள், நிதிசார் முகாமைத்துவ முறைமைகள் மற்றும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கங்கள் 27-29
   h. பணிப்பகங்கள் மற்றும் கட்டளைப் பிரிவுகளின் 2018 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகைகளின் சுருக்கம் 29
      (1) வான் நடவடிக்கைகள் பணிப்பகம் 29-41
      (2) தரை நடவடிக்கைகள் பணிப்பகம் 42-43
      (3) வானூர்திசார் பொறியியல் பணிப்பகம் 43-69
      (4) பொதுப் பொறியியல் பணிப்பகம் 69-85
      (5) இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்புப் பொறியியல் பணிப்பகம் 86-99
      (6) தளவாட வழங்கல்கள் பணிப்பகம் 100
      (7) நிருவாகப் பணிப்பகம் 100-104
      (8) சிவில் பொறியியல் பணிப்பகம் 105-108
      (9) பயிற்சிப் பணிப்பகம் 109-112

| | | |
|---|---|---|
| (10) | சுகாதார சேவைகள் பணிப்பகம் | 112-115 |
| (11) | நலன்புரிப் பணிப்பகம் | 116-123 |
| (12) | பல்மருத்துவ சேவைகள் பணிப்பகம் | 123-124 |
| (13) | ஒழுக்கப் பாதுகாப்புப் பணிப்பகம் | 124-126 |
| (14) | ஆற்றுகைக் கலைகள் பணிப்பகம் | 126-127 |
| (15) | வான் புலனாய்வுப் பணிப்பகம் | 128 |
| (16) | ஊடகப் பணிப்பகம் | 129-132 |
| (17) | தகவல் தொழில்நுட்பவியல் பணிப்பகம் | 132-141 |
| (18) | விளையாட்டுகள் பணிப்பகம் | 142-143 |
| (19) | நிதிப் பணிப்பகம் | 144 |
| (20) | சிவில் நிருவாகப் பணிப்பகம் | 144 |
| (21) | பாதீட்டுப் பணிப்பகம் | 144 |
| (22) | கட்டளை ஆட்சேர்ப்புப் பிரிவு | 144-145 |
| (23) | கட்டளை விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புப் பரிசீலனையகம் | 145-146 |
| (24) | கட்டளை தர உறுதிப்பாட்டுப் பரிசீலனையகம் | 147-150 |
| (25) | கட்டளை சட்டத் திணைக்களம் | 150-152 |
| (26) | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | 153-162 |
| (27) | கட்டளை ஆய்வு மற்றும் அபிவிருத்தி அறை | 163-164 |
| (28) | ஐ.நா. அமைதி காக்கும் பணிகள் | 164-166 |
| 4. | நிதிக் கூற்றுக்கள் | 167-185 |
| 5. | இலங்கை விமானப் படையால் மேற்கொள்ளப்பட்ட நிறுவன சமூகப் பொறுப்புடைமை செயற்றிட்ட நடவடிக்கைகள் | 186-218 |
| 6. | நிறுவனக் கட்டமைப்பு | 219 |
| 7. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு | 219-222 |
| 8. | முடிவுரை | 223 |
| 9. | சுருக்கக் குறியீடுகள் | 224-227 |
| 10. | பின்னிணைப்புகள் | 228 |

## 1. விமானப் படைத் தளபதியின் செய்தி



விமானப் படைத் தளபதி என்ற ரீதியிலும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற ரீதியிலும் இரண்டாவது நிதியாண்டின் நிறைவு மீதான இலங்கை விமானப் படையின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைக்கு செய்தியைப் பதிவுசெய்வதை யிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். ஒட்டுமொத்தத்தில் இது ஒரு சவால்மிக்க ஆண்டாக இருந்த போதிலும் நாங்கள் தொடர்ச்சியாக முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்பதை நான் நம்புகிறேன். நாங்கள் முற்றுமுழுதாக பாராளுமன்ற கட்டுப்பாட்டினுள் தொடர்ந்தும் எங்களது வளங்களைத் தக்க வைத்திருப்பதற்கு இயலக்கூடியவாறு கவனமாக உச்சப் பயன்பாட்டில் பயன்படுத்துகிறோம். உபாய தொலைநோக்குப் பார்வையுடன், அதிக நிலைபேறான அணுகலை வழங்குவது என்ற எனது நோக்கத்தில் விறைப்பாக இருப்பினும் உண்மையில் நடவடிக்கைத் திட்டமானது வருடாந்த மதிப்பீடுகளின் பாதீட்டு ஏற்பாடுகளினுள் இ.வி.ப. முழுவதும் காணப்படுகிறது.

இலங்கை விமானப் படையானது பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகள் வழியாக அரச நிதியைச் செலவு செய்வதற்கு அதிகாரத்தைப் பெற்றுள்ளது. ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளுக்கு எதிராக செலவு செய்தல்கள் பொதுத் திறைசேரியால் வழங்கப்பட்ட ஆணைப்பத்திர்ததிற்கு இணங்க முன்னெடுக்கப்படுகின்றன. 2018 ஆம் ஆண்டிற்காக போதுமானளவு ஏற்பாடுகள் கிடைப்பதை எதிர்பார்த்து பாதிடப்பட்டதன்படி 2017 ஆகஸ்ட்டில் தனது வரைவு மதிப்பீடுகளை இ.வி.ப. சமர்ப்பித்திருந்தது. 2018 ஆம் ஆண்டிற்கான திணைக்களச் செலவுத் திட்டங்கள் மூன்று ஆண்டு நிறுவனத் திட்டம் 2018-2020 இன் அடிப்படையில் அமைந்துள்ளன.

நிதியாண்டு ஒன்றின் ஆரம்பத்தில், பாதீட்டு ஏற்பாடுகள் இ.வி.ப. இன் பணிப்பாளர்கள் மற்றும் கட்டளை அதிகாரிகள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இ.வி.ப. நிறுவனத் திட்டத்தில் அமைக்கப்பட்ட இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைவதற்கு விளைதிறன்மிக்க மற்றும் வினைத்திறனான வருடாந்த பாதீட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்தும் பொருட்டு தத்தமது ஆளுகையின்படி இ.வி.ப. இலுள்ள பணிப்பாளர்கள் மற்றும் கட்டளை அதிகாரிகளுக்கு கணக்கீட்டு உத்தியோகத்தருக்கான பொறுப்புகள் கையளிக்கப்பட்டுள்ளன. எனவே, அத்தகைய பணிப்பாளர்களும் கட்டளை அதிகாரிகளும் திணைக்கள உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் உறுதிப்பாட்டு வேலைச் சட்டகத்தின் பொறுப்புகள் மற்றும் தேவைப்பாடுகளில் தத்தமது பகுதிகளின் தேவைகளை நிறைவு செய்வதற்குக் கட்டுப்பட்டுள்ளனர்.
வருமான ஈட்டங்கள் தொடர்பில், இரண்டு இ.வி.ப. அணிகள் தென் சூடான் மற்றும் மத்திய ஆபிரிக்கக் குடியரசில் ஐ.நா. அமைதி காக்கும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் பொதுத் திறைசேரிக்கு வெளிநாட்டு நாணயங்களை அதிகளவில் பெற்றுக் கொடுப்பதற்காக இ.வி.ப. ஐ.நா. அமைதிகாக்கும் முயற்சிகளை மேலும் விரிவாக்கவதற்கு எதிர்பார்த்துள்ளது.

செயற்பாடுகளுக்கு மேலதிகமா, இ.வி.ப. ஆனது 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தேசத்தைக் கட்டியெழுப்ப உதவுதல், தேசிய நல்லிணக்கச் செயன்முறை போன்ற பல்வேறு முக்கிய விடயங்களிலும் பங்களிப்புச் செய்திருக்கிறது. இ.வி.ப. அடுத்த ஆண்டில் மேலதிக சவால்களைச் சந்திக்க நேரிடினும், இ.வி.ப. யின் இன்று செய்கின்ற பணிகள் எதிர்காலத்திற்குரியதாகக் கருதப்படுவதுடன் தாய்நாட்டிற்காக துணிச்சலுடன் வேலை செய்யும் ஆண்களும் பெண்களும் அவர்களது உற்பத்தித்திறன் பணிகளை சிறந்த முறையில் முன்னெடுக்கக்கூடியதாக இருக்கும்.

**எயார் மார்ஷல் கபில ஜயம்பதி**
WWV, RWP, RSP & three Bars, VSV, USP, MSc(Int Rel), MMSc (Strat Stu-China), MIM (SL), fndu (China), qhi
**விமானப் படைத் தளபதி**
30 April 2019

## 2. முகாமைத்துவ சபையும் ஏனைய பிரதான நியமனங்களும்

### a. முகாமைத்துவ சபை

விமானப் படை முகாமைத்துவ சபை ஒன்றினால் ஆளப்படுகிறது. 2018 ஆம் ஆண்டிற்கான முகாமைத்துவ சபையின் உறுப்பினர்கள் பின்வருமாறு :

(1) விமானப் படைத் தளபதி

எயார் மார்ஷல் கே வி பி ஜயம்பதி WWV, RWP, RSP and three Bars, VSV, USP, MSc (Int Rel), MMSc(Strat Stu-China), MIM (SL), fndu (China), qhi

(2) பதவிநிலைத் தலைமை அதிகாரி

எயார் வைஸ் மார்ஷல் டி எல் எஸ் டயஸ் RSP and three Bars, MSc (Def Strat Stu), ndc, psc

(3) பிரதிப் பதவிநிலைத் தலைமை அதிகாரி

எயார் வைஸ் மார்ஷல் ஏ எம் த சொய்சா MSc, (Def & Strat Stu), MSc (NSWS-Pak), ndc (Pak), ctf-ndu,psc

(4) வான் நடவடிக்கைகள் பணிப்பாளர்

எயார் வைஸ் மார்ஷல் எஸ் கே பத்திரண RWP and Bar, RSP and three Bars, USP, MSc (MOA) USA, MSc (Def Stu) in Mgt, M Phil(Ind), MIM(SL), ndc(Ind), psc, qfi

(5) வானூர்திசார் பொறியியல் பணிப்பாளர்

எயார் வைஸ் மார்ஷல் எம் டி ரத்நாயக்க MSc (Def Stu) in Mgt, MDS, psc

(6) பொதுப் பொறியியல் பணிப்பாளர்

எயார் வைஸ் மார்ஷல் ஏ டபிள்யு ஈ விஜேசூரிய USP, MSc (MOA), USA, MSc (Def Stu) in Mgt, MSc (MSWS-Pak), MDS, ndc (Pak), psc.

(7) இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்புகள் பொறியியற் பணிப்பாளர்

எயார் வைஸ் மார்ஷல் ஏ டபிள்யு ஈ விஜேசூரிய USP, MSc (MOA), USA, MSc (Def Stu) in Mgt, MSc (MSWS-Pak), MDS, ndc (Pak), psc (22.07.2018 வரை)

எயார் கொமதோர் கே ஏ எல் ரணதுங்க USP, MSc (Def Stu) in Mgt, MSc (Mil Stu), MDS, fndu (China), psc (23.07.2018 இலிருந்து)

(8) தளவாட வழங்கல்கள் பணிப்பாளர்

எயார் வைஸ் மார்ஷல் எச் எம் எஸ் கே பி கொடகதெனிய WWV, RWP, RSP, USP, MSc (Def & Strat Stu), fndu, psc

(9) நிருவாகப் பணிப்பாளர்

எயார் வைஸ் மார்ஷல் சி பி வெலிகல USP (03.06.2018 வரை)

எயார் வைஸ் மார்ஷல் பி டி கே ரி ஜயசிங்க சWP, RSP and two Bars, USP, MSc (War Stu & Def Mgt-Pak), MSc (Def Stu) in Mgt, MoSS (Ban), LLB, aowc (Pak), ndc (04.06.2018 இலிருந்து)

(10) தரை நடவடிக்கைகள் பணிப்பாளர்

எயார் வைஸ் மார்ஷல் கே எப் ஆர் பெர்னாண்டோ RSP, USP, MDS, ctf-ndu, psc

(11) சிவில் பொறியியல் பணிப்பாளர்

எயார் வைஸ் மார்ஷல் எம் ஆர் கே சமரசிங்க Eng, USP, BSc (Def Stu), AMIE(SL)

(12) சுகாதார சேவைகள் பணிப்பாளர்

எயார் வைஸ் மார்ஷல் எல் ஆர் ஜயவீர USP, MBBS (Sri Lanka), MSc (Def & Strat stu), Dip (AV med-USA), psc

(13) பயிற்சிப் பணிப்பாளர்

எயார் வைஸ் மார்ஷல் பி டி கே ரி ஜயசிங்க RWP, RSP and Bar, USP, MSc (War Stu & Def Mgt-Pak), MSc (Def stu) in Mgt, MoSS (Ban), LLB, aowc (Pak), ndc.(29.05.2018 வரை)

எயார் வைஸ் மார்ஷல் டபிள்யு எம் கே எஸ் பி வீரசிங்க USP, MMS, MSc (Def & Strat Stu), MBA, MA (Fin & Econ), BA (Def Stu), Pg Dip (IR), MISMM, MIM(SL), hdmc, psc(30.05.2018 இலிருந்து)

(14) நலன்புரிப் பணிப்பாளர்

எயார் வைஸ் மார்ஷல் பி டி ஏ மரிஸ்ரெல்லா MBBS (Sri Lanka)

## b. முகாமைத்துவ சபை அல்லாத பணிப்பாளர் நியமனங்கள்

(1) வான் புலனாய்வுகள் பணிப்பாளர்

எயார் வைஸ் மார்ஷல் எச் எம் எஸ் கே பி கொடகதெனிய WWV, RWP, RSP, USP, MSc (Def & Strat Stu), fndu, psc

(2) பாதீட்டுப் பணிப்பாளர்

எயார் கொமதோர் எஸ் எம் எஸ் பி கொஸ்வத்த USP,BA (Def Stu)

(3) சட்டப் பணிப்பாளர்

குறூப் கெப்டன் எஸ் என் எஸ் என் டயஸ் LLM, LLB, BA, (Leg Pol) Attorney at Law, Notary Public, Commissioner for Oaths, Company Secretary

(4) ஊடகப் பணிப்பாளர்

குறூப் கெப்டன் எம் டி ஏ ஜி செனவிரத்ன USP, MDS, BSc (Aero Eng-USA), psc

(5) ஒழுக்கப் பாதுகாப்புப் பணிப்பாளர்

எயார் கொமதோர் வி பி பாலசூரிய USP, MDS, BA (Def Stu), MIM (SL), psc, (13.06.2018 வரை)

குறூப் கெப்டன் பி என் த கொஸ்தா (14.06.2018 இலிருந்து 13.09.2018 வரை)

எயார் வைஸ் மார்ஷல் எம் டபிள்யு ரி ஐ த சில்வா RSP, psc (14.09.2018 இலிருந்து)

(6) ஆற்றுகைக் கலைகள் பணிப்பாளர்

குறூப் கெப்டன் எம் சி அமரசிங்க

(7) விளையாட்டுப் பணிப்பாளர்

எயார் கொமதோர் ஐ கே வீரரத்ன USP, BA (Def Stu)

(8) தகவல் தொழில்நுட்பவியல் பணிப்பாளர்

எயார் கொமதோர் ஏ எஸ் விதான USP, MSc (Def Stu) in Mgt, BSc (Hons), psc

## c. கட்டளை நியமனங்கள்

(1) ஒட்டுமொத்த நடவடிக்கைகள் கட்டளைத் தளபதி வான் பாதுகாப்பு

எயார் வைஸ் மார்ஷல் எம் டி ஏ பி பயோய் RWP, RSP, USP, MSc (NSWS-Pak), ndc (pak), psc

(2) கட்டளை அதிகாரி தொண்டர் விமானப் படை
எயார் கொமதோர் சி எச் ஆர் சொய்சா USP, MSc (Def & Strat Stu), BA (Def Stu), psc (14.02.2018 வரை)
எயார் கொமதோர் சி என் வீரசிங்க USP, BA(Def Stu) (15.02.2018 இலிருந்து)

(3) கட்டளை அதிகாரி இலங்கை விமானப் படை பெண்கள் பகுதி

எயார் கொமதோர் ஆர் எஸ் பியன்வில USP, psc

(4) கட்டளை வேளாண் அதிகாரி

குறூப் கெப்டன் ஓ ஏ என் எஸ் பெர்னாண்டோ USP, MSc (Def Stu) in Mgt, MDS, BSc, (Def Stu) in mgt, MHRM,psc

(5) கட்டளை கணக்காய்வு அதிகாரி

குறூப் கெப்டன் எம் ஏ எஸ் என் விஜேசிங்க USP, MSc (Def Stu) in Mgt, BSc (Pub Admin), CBA (ICASL)

(6) கட்டளை பல்மருத்துவ அதிகாரி

குறூப் கெப்டன் டபிள்யு கே எம் வீரசேகர MS (Orthodontics), BDS (Sri Lanka)

(7) கட்டளை அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் அதிகாரி

எயார் கொமதோர் ரி ஏ விமலரத்ன ருSP, MSc (Def Stu) in Mgt, BSc (Def Stu), psc.

(8) கட்டளை விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு அதிகாரி

எயார் கொமதோர் ஆர் பி லியகமகே WWV, RWP, USP, MSc (Strat Stu-Pak), MDS, fawc (Pak), psc (27.08.2018 வரை)

எயார் கொமதோர் ஆர் எஸ் விக்கிரமரத்ன RWP and two Bars , RSP and two Bars ,USP, MSc (Strat Stu), ndc (Ind), fawc , qfi (28.08.2018 இலிருந்து)

(9) கட்டளை கருவி தரப்படுத்தல் பரிசோதகர் (F/W)

குறூப் கெப்டன் ஏ வி ஜயசேகர WWV and Bar, RWP, RSP and two Bars, psc, qfi

(10) கட்டளை கருவி தரப்படுத்தல் பரிசோதகர (R/W)

குறூப் கெப்டன் வி பி எதிரிசிங்க WWV, RWP, RSP and three Bars, psc, qhi

(11) கட்டளை உள்ளகக் கணக்காய்வாளர் (சேவைப் பகுதி)

விங் கொமாண்டர் ஆர் ஆர் சோமதிலக MBS (Col), B.Com (Sp) Hons, Pg Dip (Def Mgt), CBA (ICASL), MAAT (SL), FPFA

(12) கட்டளை வெளியீட்டு அதிகாரி

எயார் கொமதோர் கே ஜி டி என் ஜயசிங்க Msc (Def & Strat Stu), BSC (Def Stu) in Mgt, psc

(13) கட்டளை தர உறுதிப்பாட்டு அதிகாரி

எயார் கொமதோர் ரி ஏ டி ஆர் சேனநாயக்க RWP, RSP, USP

(14) கட்டளை ஆட்சேர்ப்பு அதிகாரி

எயார் கொமதோர் ஏ ஜே அமரசிங்க RSP, USP, MDS, MHRM, BSc (Def Stu) in Mgt, psc

(15) கட்டளை ஆய்வு மற்றும் அபிவிருத்தி அதிகாரி

எயார் கொமதோர் ஜே பி பாலசூரிய USP, MSc (Def Stu) in Mgt, BSc (Def Stu) in Mgt

(16) கட்டளை நலன்புரி செயற்றிட்டங்கள் அதிகாரி

குறூப் கெப்டன் டி சி ஐ வீரசூரிய USP, isc, psc

## d. சிவில் பதவிநிலை உத்தியோகத்தர் நியமனங்கள்

(1) சிவில் நிருவாகப் பணிப்பாளர்

திருமதி ஈ எம் டி எஸ் விஜேசூரிய SLAS (30.05.2018 வரை)

திருமதி ஏ ஏ ஐ கே அமரசிங்க BA (01.08.2018 இலிருந்து)

(2) நிதிப் பணிப்பாளர்

திரு. ஜி ஆர் எல் வசந்த B. Com (sp), MA (Econ), FMAAT, DIPPCA, CBA, APFA, AMA, CPFA, Dip in Accy

(3) பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் (சிவில்)

திருமதி கே ஏ டி டி ஏ குமாரபேலி BBMgt (Acc) Sp, MA (Econ)

## 3. முகாமைத் தீர்மானமும் பகுப்பாய்வும்

### a. இலங்கை விமானப் படை பற்றி

#### (1) நோக்குக் கூற்று

“விமான சக்தியின் விளைதிறன்மிக்க பணியினூடாக தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்தல;”

#### (2) பணிக் கூற்று

“.தேசிய பாதுகாப்புக்கு ஆதரவளிப்பதற்கான வான் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக எங்களது முக்கிய ஆற்றல்களைப் பயன்படுத்தி ஒரு தொழில்வாண்மையான துணிகர விமானப் படையொன்றைப் பயிற்றுவித்து, சித்தப்படுத்தி, நிலைநிறுத்துதல்”

#### (3) முக்கிய ஆற்றல்கள்

நிறுவனம் ஒன்றின் முக்கிய ஆற்றல்கள் என்பது அந்நிறுவனத்தை அதன் இலக்குகளை அடைவதை நோக்கிக் கொண்டுசெல்கின்ற முக்கிய காரணிகள் ஆகும். இ.வி.ப.கூட ஒப்பற்ற சில முக்கிய ஆற்றல்களைக் கொண்டிருக்கிறது. அவை பின்வருமாறு:

(a) <u>இராணுவப் பறப்புகளும் வான் பாதுகாப்பு இயலுமையும்:</u> இ.வி.ப. இலங்கையில் இராணுவப் பறப்பு மற்றும் வான் பாதுகாப்புச் செயற்பாடுகளை நடாத்துகின்ற தனி உரிம நிறுவனமாகும்.

(b) <u>வரையறுக்கப்பட்ட வளங்களின் புத்தாக்கத் தழுவல்</u> : இ.வி.ப. அதன் வரலாற்றுப் பாதை நெடுகிலும் வேறுபட்ட சந்தர்ப்பங்களில் உயர்ந்தபட்ச அடைவுகளை பெறுவதற்காக வரையறுக்கப்பட்ட வளங்களின் பாவனை மற்றும் அதன் பிரயோகத்தில் ஒரு தனித்த தழுவல் தன்மையைக் காட்டியிருக்கிறது.

(c) <u>வேறுபட்ட செயற்பாட்டு அனுபவங்களுடன்கூடிய தொழில்வாண்மை மிக்க, ஊக்கமுள்ள வேலைப்படை :</u> பிரித்தானியாவின் றோயல் விமானப் படையிலிருந்து மரபுரிமையாக்கப்பட்ட பண்பாடுகளின் உயர் பாரம்பரியத்தைப் பெற்றிருக்கின்ற இலங்கை விமானப் படையானது அதன் துவக்கத்திலிருந்து நடாத்திய பல்வேறு செயற்பாடுகளின் மூலமான வான் சக்தியின் பிரயோகத்தால் நன்கு கட்டமைக்கப்பட்ட பயிற்சி மற்றும் தொழில்வாண்மைசார் விருத்தியாக்கல் கட்டமைப்பு மற்றும் வளமிக்க அனுபவம் ஆகியவற்றைப் பெற்றுக்கொண்டுள்ளது. இது அர்ப்பணிப்பு, ஊக்கம், மற்றும் பெரிதும் தழுவுகின்ற தொழில்வாண்மைசார் படையை உருவாக்கியிருக்கிறது.

(d) தேசிய பாதுகாப்பிற்கான மின்காந்த அலைக்கற்றை மற்றும் இயங்குமுறை வெளி ஆகியவற்றின் பயனுறுதிமிக்க, பாதுகாப்பான, பொறுப்பு மிக்க பயன்பாடு

(e) பிரத்தியேகமான நாடு தழுவிய பாதுகாப்பான தொலைத்தொடர்பு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் ராடார் வலையமைப்பின் ஊடாக இலங்கை விமானப் படையானது தொடர்பாடலுக்கான மின்காந்த அலைக்கற்றையையும் தகவல் முகாமைத்துவத்திற்கான வான் கண்காணிப்பு மற்றும் இயங்குமுறை வெளியையும் பயன்படுத்து வதற்கான பிரத்தியேக ஆற்றலைக் கொண்டிருக்கிறது.

### (4) எமது வகிபாகம்

**(a)** தரை மற்றும் கடற்படையினருக்கு போர்த்திறஞ் சார்ந்த வான் ஆதரவு மற்றும் போக்குவரத்தினை வழங்குதல்

(b) அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில் இடர்மீட்பு வசதிகள் மற்றும் போக்குவரத்தினை வழங்குதல்

(c) விமானப் பராமரிப்பு, வீதிப் போக்குவரத்து, இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் ஏனைய பொறி மற்றும் இயந்திரங்களுக்கு பொறியியல் மற்றும் தளவாட வழங்கல் சேவைகளை அளித்தல்

(d) உள்ளகப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக துரப்புகளை வழங்குதல்

(e) தேசிய அபிவிருத்தியுடன் தொடர்புபட்ட படை நடவடிக்கை அல்லாத வான் நடவடிக்கைகள் மற்றும் ஆய்வு, அபிவிருத்திச் செயற்றிட்ட முன்னெடுப்புகளை மேற்கொள்ளல்

(f) மனித வளங்கள், விமானங்கள் மற்றும் வாகனங்கள் ஆகியவற்றை வழங்குவதன் மூலமான ஐ.நா. அமைதிகாக்கும் படையில் துடிப்புடன் பங்களிப்புச் செய்தல்

## b. ஊழியர் கூட்டமைவும் எண்ணிக்கைகளும்

2018 டிசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான இலங்கை விமானப் படையின் பதவியணி விபரம் கீழே அட்டவணை 1 மற்றும் அட்டவணை 2 இல் தரப்படுகின்றன :

### (1) சேவை பதவியணி

| விபரம் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போதுள்ள பதவியணி | மேலதிகம்/ (வெற்றிடம்) |
|---|---|---|---|
| அதிகாரிகள் (நிரந்தரம் / தொண்டர்) | 2,156 | 2,057 | (99) |
| ஏனைய பதவி நிலையினர் (நிரந்தரம் / தொண்டர்) | 35,844 | 34,006 | (1,838) |
| மொத்தம் | 38,000 | 36,063 | (1,937) |

அட்டவணை: 1

### (2) சிவில் பதவியணி

| விபரம் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போதுள்ள பதவியணி | மேலதிகம்/ (வெற்றிடம்) |
|---|---|---|---|
| சிரேஷ்ட தரம் | 8 | 7 | (1) |
| மூன்றாம் நிலை | 4 | 3 | (1) |
| இரண்டாம் நிலை | 176 | 113 | (63) |
| ஆரம்ப நிலை | 2,900 | 2,710 | (190) |
| மொத்தம் | 3,088 | 2,833 | (255) |

அட்டவணை: 2

## c. இலங்கை விமானப் படை செயலாற்றுகை

### (1) பிரதான அடைவுகள்

2018 ஆம் நிதியாண்டு காலப் பகுதியில், தேசத்தின் பாதுகாப்பிற்கான வான் சக்தியின் விளைதிறன்மிக்க பாவனையில் இலங்கை விமானப் படையின் பிரதான வகிபாகத்திற்கு மேலதிகமாக, நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் இலங்கை விமானப் படை தனது பங்களிப்பினை நல்கியிருந்தது. குறிப்பாக, 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில், இலங்கை விமானப் படை நாட்டின் சுற்றுலாத் துறையின் அபிவிருத்திக்கான ஒரு முன்தேவைப்பாடாக அடையாளங் காணப்பட்ட உள்நாட்டு விமானப் போக்குவரத்தை அபிவிருத்தி செய்யும் அதன் முன்னணி வகிபாகத்தை தொடர்ச்சியாக மேற்கொண்டிருந்தது. தேசிய அழிவுகள் மற்றும் இடர்களில் காயப்பட்டவர்களை வெளியேற்றுதல் மற்றும் சரியான நேரத்தில் துருப்புகளை ஈடுபடுத்தல் ஆகியவற்றில் துடிப்புடன் பங்காற்றியதன் மூலம் ஒரு பாரிய வகிபாகத்தினையும் இலங்கை விமானப் படை வகித்திருந்தது. 2018 ஆம் ஆண்டு வருடாந்த செயலற்றுகை அறிக்கையானது, வருடாந்த பாதீட்டு ஒதுக்கீடுகளுடனான வருடாந்த நடவடிக்கைத் திட்டத்தின் (வருடாந்த செயற்பாட்டுத்திட்டம்) பகுப்பாய்வினை உள்ளடக்குகிறது. மேலும், இலக்குகளை நிறைவேற்றுவதற்காக 2018 ஆம் ஆண்டு காலப் பகுதி நடவடிக்கைகளின் உண்மையான செயலாற்றுகைகளுடன் பகுப்பாய்வு செய்து 2018 ஆம் ஆண்டில் செய்ய உத்தேசித்த திட்டமிடலுக்கான சிறப்புக் கூறுகளும் எடுத்துக்காட்டப்பட்டன.

### (2) வருடாந்தப் பாதீட்டுடனான வருடாந்த நடவடிக்கைத் திட்டப் பகுப்பாய்வு

(a) வருடாந்த செயலாற்றுகை அறிக்கையானது வருடாந்த நடவடிக்கைத் திட்டத்துடன் வருடாந்தப் பாதீட்டின் அதே அடிப்படையின் மீது உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கை 2018 – 2020 ஆம் ஆண்டிற்கான நிறுவனத் திட்டத்தில் அமைக்கப்பட்ட இலக்குகளுக்கு இயைபான செயலாற்றுகையைக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு பகுதியும் அதன் முற்பகுதியில் ஒரு சிறிய செயலாற்றுகைப் பொழிப்பினையும் மதிப்பீட்டையும் கொண்டிருக்கின்றது. மேலும் ஆண்டின் போதான பாதுகாப்புடன் தொடர்புடைய செயற்பாடுகளில் சில பொருத்தமான விடயங்கள் மீது ஒரு கட்டுரையைப் பின்புலமாகக் கொண்டிருக்கிறது.

(b) வருடாந்த அறிக்கையானது திணைக்களம் ஒழுங்கமைக்கப்பட்ட தடத்தில் வளர்ந்துவரும் உயர்மட்ட முன்னுரிமைகள் மற்றும் மாற்றங்களைப் பிரதிபலிப்பதற்காக அதிக நேரம் ஆற அமரச் சிந்தித்து வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆகையால், ஒட்டுமொத்தக் கட்டமைப்பும் சீராக இருக்கும் என்ற போதிலும் உயர்மட்ட ஆதரவு நோக்கங்கள் மற்றும் வழிகளில் ஒரு வருடாந்தப் பாதீட்டிலிருந்து அடுத்ததிற்கு ஒரு குறிப்பிட்டளவு மாற்றங்கள் தவிர்க்க முடியாததாக இருக்கின்றன. அவையும் இணைவு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(c) இலங்கை விமானப் படையின் உயர் மட்ட நோக்கங்கள் நிறுவனத் திட்டம் 2018 – 2020 இல் அமைக்கப்பட்டுள்ளன. ஆகையால் வருடாந்த அறிக்கையானது 2018 – 2020 ஆம் ஆண்டிற்கான நிறுவனத் திட்டம் மற்றும் 2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த நடவடிக்கைத்

திட்டம் ஆகியவற்றில் அமைக்கப்பட்ட இலக்குகளுக்கு எதிரான 2018 டிசெம்பர் 31 இல் உள்ளபடியான ஒரு செயலாற்றுகைப் பொழிப்புடன் ஆரம்பிக்கிறது. செலவு மீளாய்வானது அறிக்கை நெடுகிலும் தரப்பட்டுள்ளது

### (3) திணைக்கள ஒதுக்கீட்டுக் கணக்குகள் 2018

**(a)** ஒவ்வொரு நிதியாண்டிற்காகவும் ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட, நிலைநிறுத்தப்பட்ட மற்றும் விற்பனை செய்யப்பட்ட வள விபரங்களின் ஒதுக்கீட்டுக் கணக்குகளையும் அவை பயன்படுத்தப்பட்ட வழிகளையும் தயாரிப்பதற்கு திணைக்களம் தேவைப்படுத்தப் பட்டிருக்கிறது. ஒதுக்கீட்டுக் கணக்கு, நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் திறைசேரி வழிகாட்டல்களுக்கு இணங்க காசு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

(டி) நிதியாண்டிற்காக திணைக்கள விவகாரங்கள், மொத்த வள விளைவு, நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட வளங்கள், அங்கீ கரிக்கப்பட்ட வருவாய்கள் மற்றும் இழப்புகளுடன் காசுப் பாய்வுகள் பற்றி கூறப்படுவதில் உண்மையான, நேர்மையான பார்வையை அவை தருதல் வேண்டும். 2018 ஆம் ஆண்டிற்கான திணைக்கள ஒதுக்கீட்டுக் கணக்குகள் இவ்வறிக்கையில் இணைக்கப்பட்டுள்ளன.

## d. செயலாற்றுகை முகாமைத்துவத்திற்கான உபாய வேலைச்சட்டகம்

(1) இங்கு, செயலாற்றுகை முகாமைத்துவம் என்பது உபாய இலக்குகளையும் முன்னுரிமைகளையும் அமைத்தல், நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குதல், நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளைக் கண்காணித்தல், தரவு சேகரித்தலும் இலக்குகளை நோக்கிய முன்னேற்றத்தை அளவிடலும், நிகழ்ச்சித்திட்டம் மற்றும் வள ஒதுக்கீடு தீர்மானமெடுத்தலில் செல்வாக்குச் செலுத்துவதற்காக செயலாற்றுகையைப் பயன்படுத்துதலும் தகவல்களை மதிப்பீடு செய்தலும் மற்றும் அக்கறையுடைய தரப்பினருப்பு பேறுகளை தொடர்பாடுதல் போன்ற பல கட்ட செயன்முறை ஆகும்.

(2) இவிப இன் செயலாற்றுகை முகாமைத்துவமானது உயர்மட்ட மூன்று வருட இ.வி.ப. நிறுவனத் திட்டம் 2018-2020 மற்றும் 2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த நடவடிக்கைத் திட்டம் ஆகியவற்றினால் வழிகாட்டப்படுகிறது.

## e. உபாய இலக்குகளும் பேறுகளும்

விமானப் படையின் 2018 – 2020 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான நிறுவனத் திட்டம் மற்றும் 2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த நடவடிக்கைத் திட்டம் ஆகியவற்றில் அமைக்கப்பட்ட இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடையும் பொருட்டு 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பின்வரும் பணிகளை இலங்கை விமானப் படை நிறைவேற்றியுள்ளது.

### (1) இலக்கு 01 – இலங்கை விமானப் படையின் பறப்பு மற்றும் நடவடிக்கை இயலுமையை மேம்படுத்தலும் வலுப்படுத்தலும்

பிரதான அடைவுகள்

(a) தேசிய வான் பாதுகாப்பு இயலுமையை மேம்படுத்துவதற்காக ROHONI 3D CAR ராடாரும் எடுத்துச் செல்லக்கூடிய தீ கட்டுப்பாட்டு ராடார் முறைமையும், ஏவுகணைப் பிரிவு மற்றும் சுயமாகச் செலுத்தப்படும் விமான எதிர்ப்பு ஏவுகளை முறைமை ஆகியவற்றின் மீதான கையகப்படுத்தல் செயன்முறை

(b) வான் நடவடிக்கை இயலுமையை உயர்த்துவதற்காக இ.வி.ப. இல் தற்போதுள்ள சண்டை விமானப் படையணியை மேம்படுத்துகின்ற அதேவேளை விமானப் படையணிக்கான பார மின்தூக்கி (உத்திசார்ந்த மற்றும் உபாயம் சார்ந்த) மற்றும் பல்பணி சண்டை விமானங்கள் ஆகியவற்றை இ.வி.ப. இற்கு கொள்வனவு செய்வதற்கான செயன்முறை நடைபெறுகின்றன. மேலும், F7-BS மற்றும் F7-GS பல்பணி சண்டை விமானங்கள் இ.வி.ப. இன் 2018 ஆம் ஆண்டு AOW செயற்றிட்டம் ஊடாக பழுதுபார்க்கப்பட்டன.

(c) இ.வி.ப. ஆனது HADR இன் பிராந்திய ஒத்துழைப்பை வலுப்படுத்தும் பொருட்டு இலங்கை விமானப் படைச் சொத்துக்கள் மற்றும் கிடைக்கக்கூடிய வளங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி பிராந்திய விமானப் படைகளுடன் HADR நடவடிக்கைகளில் பங்குபற்றியது.

## (2) இலக்கு 02 - EEZ ஐ உள்ளடக்கியவாறு இலங்கையின் ஆட்சிப்பகுதிக்கு மேலாக உபாயம் மற்றும் உத்தி சார்ந்த வான்பகுதிக் கண்காணிப்பு மற்றும் உளவு இயலுமைகளை விருத்தி செய்தல்

### பிரதான அடைவுகள்

(a) தொழில்நுட்ப மேம்படுத்தல்கள், ஞஆநுநு மற்றும், SLN மற்றும் வேறு பிராந்திய அக்கறையுள்ள தரப்பினருடன் இணைந்த பயிற்சி ஆகியவற்றுக்காக பிராந்திய விமானப் படைகளை ஒன்றிணைத்தல், கடல்வழி வான் இயலுமையை விருத்தி செய்வதற்காக SLN வசதியளித்தல் ஆகியவற்றை மேற்கொண்ட அதே வேளை கடல்வழி இயலுமையை உயர்த்துவதற்காக இ.வி.ப. இல் இல. 03 கடல்வழிப் படையணியைத் தாபித்தல்

(b) இ.வி.ப. இல் தற்போதுள்ள UAV முறைமை மேம்படுத்தப்படும் அதே வேளை மூலோபாய UAV முறைமையின் கையகப்படுத்தலுக்கான முன்மொழிவை ஆரம்பித்தலும் AMSCC உடனான நிகழ் நேர தரவு தொடுப்பு / தொடர்பாடலைத் தாபித்தலும் (வான் மற்றும் கடல்வழி உபாயக் கட்டளை நிலையம்). மேலும், R & D செயற்றிட்டத்தின் கீழ் சுதேசமாக விருத்தி செய்யப்பட்ட UAV முறைமை வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது.

## (3) இலக்கு 03 - EW கிளையின் தாபிப்பும் வலையமைப்பு நடவடிக்கைகள் அறிமுகமும்

### பிரதான அடைவுகள்

இ.வி.ப. மற்றும் ஏனைய பாதுகாப்புத் தாபனங்களுடன் தொடர்புடைய இணையப் பாதுகாப்பு நிகழ்வுகளைக் கண்காணிப்பதற்கும் அடையாளம் காண்பதற்கும் 24 மணித்தியால பாதுகாப்பு SOC ஒன்றாகத் தொழிற்படுகின்ற MOD பாதுகாப்பு இணைய நடவடிக்கைகள் நிலையமொன்றை கொழும்பு இ.வி.ப. தலைமையகத்தில் தாபித்தல்

## (4) இலக்கு 04 - முக்கியமான விமானச் சொத்துக்கள் மற்றும் நிறவனங்களின் பாதுகாப்புக்காகவும் VAs மற்றும் VPs ஆகியவற்றுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காகவும் முற்றடக்கமான படைப் பாதுகாப்பை வழங்குதல்

பிரதான அடைவுகள்

சுற்றளவு பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக இ.வி.ப. தாபனங்களுக்கு கமெராக்களையும் அதனோடு தொடர்புடைய உபகரணங்களை யும் கையகப்படுத்தலையும் ஏற்பாடு செய்தலையும் மேற்கொள்கின்ற அதே நேரம் தேவையான பகுதிகளில் புதிய யுனு சாவடிகளை நிலை நிறுத்துவதன் மூலம் LBAD உள்ளடக்கும் பரப்பை வலுப்படுத்தலும் வான் பாதுகாப்புக் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு நிலையத்தை இடமாற்றுதலும்

(5) இலக்கு 05 - இரவு / பகல் / சகல காலநிலை நிலைமைகளின் போதும் நடவடிக்கைகளில் அதிகப்படியானவற்றைக் கையகப்படுத்துவதற்கு இ.வி.ப. வான்வெளிக்களங்களை மேம்படுத்தல்

பிரதான அடைவுகள்

(a) சகல விமான ஓடுதள அடையாளக் குறியிடல் மற்றும் உலங்குவானூர்தி இறங்கு தள அடையாளக் குறியிடல் என்பன ICAO ஒழுங்குவிதிகளுக்கு இணங்க நியமப்படுத்தப்பட்டது. முற்றடக்கமான தீயணைப்பு வசதிகளை வழங்குவதற்காக தரையிறங்கும் இடங்களிலும் உள்ள இ.வி.ப. தீயணைப்பு வீரர்களுக்கு தீயணைப்பு நியமச் செயற்பாட்டு நடைமுறைகள் (SOPs) பற்றி அறிவூட்டுவதற்காக DGCA யின் ஊடாக சகல சிவில் விமான இயக்குநர்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டது.

(b) தேவையான ஓடுதளங்கள் மற்றும் வாகன ஓடுதளங்கள் ஆகியவற்றின் பழுதுபார்ப்புகளுடன் காற்றழுத்த மானிகள், காற்று வேக குறிகாட்டிகள் மற்றும் விமானத்தள கலங்கரை விளக்கங்கள் போன்ற ICAO நியம சாதனங்களுடன் ATC கோபுரங்களின் மேம்படுத்தல் செயன்முறையை ஆரம்பித்தல்

(6) இலக்கு 06 - இயங்குமுறை வெளியில் நட்புரீதியான படைகள் சுதந்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்வதையும் எதிரிப் படைகள் அதனைப் பயன்படுத்துவதை / மோசமாகப் பயன்படுத்துவதைத் தடுப்பதையும் உறுதிப்படுத்துகின்ற அதே நேரம் இயங்குமுறை வெளியை உயர்ந்தபட்சம் பயன்படுத்துதல்

பிரதான அடைவுகள்

இனங்காணும் திறனை அதிகரிப்பதுடன் இணையத்தளத்தில் கொடுப்பனவு செய்யும்வரை கணினி முறைமையை அணுகுவதைத் தடைசெய்கின்ற மென்பொருள் மற்றும் ஏனய பாரிய பாதுகாப்பு அச்சுறுத்தல்களைத் தடுக்கின்ற இ.வி.ப. இலுள்ள அடுத்த தலைமுறை தீ அரண் (பயர்வால்) மென்பொருளின் நிலைபொருள் (பேர்ம்வெயார்) பதிப்பினை மேம்படுத்தல். இணையத்தள முறைமைகள் அதேபோன்று இ.வி.ப. இற்கு வழங்கப்பட்ட இணையத்தளங்களின் மேம்பாட்டிற்காக பல பாதிப்பு மதிப்பீடுகள் மற்றும் ஊடுருவல் சோதனைக் கருவிகள் கொள்வனவு செய்யப்பட்டன.

(7) இலக்கு 07 - மேலதிக நலன்புரி நடவடிக்கைகளை நடைமுறைப் படுத்துவதன் ஊடாக இ.வி.ப. இல் உயர்ந்த மன உறுதியைப் பேணுவதுடன் வரவின்மையையும் குறைத்தல்

பிரதான அடைவுகள்

இனங்காணும் திறனை அதிகரிப்பதுடன் இணையத்தளத்தில் கொடுப்பனவு செய்யும்வரை கணினி முறைமையை அணுகுவதைத் தடைசெய்கின்ற மென்பொருள் மற்றும் ஏனய பாரிய பாதுகாப்பு அச்சுறுத்தல்களைத் தடுக்கின்ற இ.வி.ப. இலுள்ள அடுத்த தலைமுறை தீ அரண் (பயர்வால்) மென்பொருளின் நிலைபொருள் (பேர்ம்வெயார்) பதிப்பினை மேம்படுத்தல். இணையத்தள முறைமைகள் அதேபோன்று இ.வி.ப. இற்கு வழங்கப்பட்ட இணையத்தளங்களின் மேம்பாட்டிற்காக பல பாதிப்பு மதிப்பீடுகள் மற்றும் ஊடுருவல் சோதனைக் கருவிகள் கொள்வனவு செய்யப்பட்டன.

## (8) இலக்கு 08 - தேசிய நலனுக்கு உதவுவதில் இ.வி.ப. வளங்களை உத்தமமாகப் பயன்படுத்தல்

பிரதான அடைவுகள்

(a) இலங்கைக்கான வான் மற்றும் தரை இடர்மீட்பு முறைமையை அறிமுகப்படுத்துவதற்காக சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சுடனான கூட்டு முயற்சிக்கு வசதியளித்தல்

(b) இ.வி.ப. இல் கிடைக்கக்கூடிய விமான சொத்துக்கள் மற்றும் ஆளணியினரைப் பயன்படுத்தி செயற்கை மழையை பெய்வித்தலுக்காக இலங்கை மின்சார சபைக்கு வசதியளித்தல்

(c) இலங்கை அரசாங்கத்தின் காடாக்கல் செயற்றிட்டத்திற்கு வசதியளிக்கும் பொருட்டு இலங்கையில் முதல் தடவையாக விதை வீசுதல் செயற்றிட்டத்தை ஆரம்பித்தல்

(d) AMSA (அவுஸ்திரேலிய கடல்வழி பாதுகாப்பு அதிகாரசபை) இன் ஒத்துழைப்புடன் ஞயுசு ஆளுகை வேலைச் சட்டகத்தை அபிவிருத்தி செய்வதற்காக CAASL இற்கு உதவுதலும் சர்வதேச SAR வேலைப்பட்டறைகள் மற்றும் செயலமர்வுகளில் பங்குபற்றலும்

(e) மாலியில் (MINUSMA) ஐ.நா. அமைதிகாப்புப் பணிக்காக 150 இ.வி.ப. ஆளணியினருடன் நான்கு (04) எம்ஐ 17 உலங்கு வானூர்திகளை (புதிய உலங்குவானூர்திகளின் கொள்வனவின் பின்னர்) ஈடுபடுத்துவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டது.

(f) மாலியில் (MINUSMA) விரைவு எதிர்நடவடிக்கைப் படை (QRF) கம்பனியாக ஐ.நா. அமைதிகாக்கும் பணியில் 160 இ.வி.ப. ஆளணியினரை ஈடுபடுத்துவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டது.

(g) 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில், குறிப்பிடத்தக்க அளவு வெளிநாட்டு வருமானம் (வெளிநாட்டு நாணய உட்பாய்வுகள்) ஐ.நா. பணிகள் ஊடாக அரசாங்கத் திறைசேரிக்கு ஈட்டப்பட்டன.

| | |
|---|---|
| பறப்பு மணித்தியாலங்கள் (2303.57 மணித்.) | - US $ 9,813,208.82 |
| பாரிய உபகரணம் மற்றும் சுய பாதுகாப்பு | - US $ 1,329,225.17 |
| துருப்பினருக்கான கொடுப்பனவு | - US $ 3,606,866.54 |

(h) 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில், இ.வி.ப ஆனது பட்டய விமானப் போக்குவரத்துகள் மற்றும் ஆயு-60 அட்டவணைப்படுத்தப்பட்ட விமானப் போக்குவரத்து நடவடிக்கை ஆகியவற்றின் ஊடாக அரசாங்கத் திறைசேரிக்கு 54,380,436.32 இலங்கை ரூபாயும் 20,326,616.88 இலங்கை ரூபாயும் ஈட்டப்பட்டுள்ளன.

(j) கட்டுநாயக்காவிலிருந்து திருகோணமலை ஊடாக பலாலி செல்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட MA – 60 அட்டவணைப்படுத்தப்பட்ட விமானப் போக்குவரத்துக் கட்டணம் 2019 சனவரி 14 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் குறைக்கப்பட்டுள்ளது.

(k) கண்டி தலதா மாளிகையில் தீ தடுப்புத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் கண்டி தலதா மாளிகையில் வாரத்தின் ஏழு நாட்களும் 24 மணிநேரமும் கடமையில் ஈடுபடுவதற்காக தீயணைப்பு வாகனம் மற்றும் தீயணைப்பு வீரர்கள் அணி என்பன ஒதுக்கப்பட்டுள்ளன.

(l) யப்பானின் நன்கொடை ஒன்றாக 3 தீயணைப்பு என்ஜின்கள் மற்றும் ஒரு (1) நோயாளர் காவு வண்டி என்பவற்றைப் பெறுவதற்கு ஒருங்கிணைப்பு வழங்கப்பட்டது. இ.வி.ப. இன் தீயணைப்பு இயலுமையை உயர்த்துவதற்காக பெறப்பட்ட தீயணைப்பு வாகனங்கள் நிலைநிறுத்தப்பட்டதுடன் சமுதாய சேவையொன்றாக அரங்கன்வில வைத்தியசாலைக்கு நோயாளர் காவுவண்டியொன்று அன்பளிப்புச் செய்யப்பட்டது.

## (9) இலக்கு 09 - வினைத்திறனை உயர்த்துவதற்கும் தொழில்வாண்மை வாதத்தினை மேம்படுத்துவதற்காகவும் இ.வி.ப. இல் தற்போதிருக்கின்ற பயிற்சி முறைமை மற்றும் நடைமுறைகளை மீளாய்வு செய்தல்

### பிரதான அடைவுகள்

(a) பயிற்சிப் பாடநெறிகளை நிறைவு செய்துள்ள அதிகாரிகள் மற்றும் விமானவீரர்கள் / விராங்கனைகள் ஆகியோர் தொடர்பில் சம்பந்தப்பட்ட கிளைத் தலைவர்கள் மற்றும் கட்டளை அதிகாரிகள் ஊடாக செயலாற்றுகை மீளாய்வினை நடத்துதல்

(b) பாடநெறிகள், தரிசிப்புகள் மற்றும் அதிகாரிகளின் பேச்சுக்களை பின்பற்றுவதன் மூலம் ஏனைய நாடுகள் மற்றும் சகோதர சேவைகளின் பயிற்சி முறைமைகளை ஒப்பிட்டு பூகோள நடப்புகள் இனங்காணப்பட்டு இ.வி.ப. இற்குப் பொருத்தமானவை ஆய்வு செய்யப்பட்டதன் பின்னர் தேவையான பயிற்சி முறைமைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.
வ

(c) தேவையற்ற பாடப்பகுதிகளை நீக்கியும் தற்போதை நடப்புக் கேற்ற புதிய விடயங்களை சேர்த்தும் தற்போதுள்ள தேவைகளின்படி பாடத்திட்டங்கள் திருத்தப்பட்டன.

(d) தேசிய உற்பத்தித்திறன் தங்க விருது போட்டி 2018 இல் வெற்றியாளராக இ.வி.ப. வந்திருந்தது.

## (10) இலக்கு 10 - இ.வி.ப. இன் படைக் கட்டமைப்பை சரியான அளவில் வைத்தல், ஆட்சேர்ப்புத் திட்டத்தைத் திருத்துதல் மற்றும் புதிய தொழில்நுட்பவியல்களை அறிமுகப்படுத்தல்

பிரதான அடைவுகள்


(a) இ.வி.ப. ஆனது நிறுவனத்தின் எதிர்காலத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு ஆட்சேர்ப்பு செயலிகளை திட்டமிட்டுள்ள அதே வேளை நிறுவன இலக்குகள் மற்றும் நோக்கங்களை வளைதிறன்மிக்க வகையில் பூர்த்தி செய்வதற்கு படைக் கட்டமைப்பை சரியான அளவில் மீளாய்ந்திருக்கிறது.

## f. நிதி நிலைமை பற்றிய பகுப்பாய்வுச் சுருக்கம்

### (1) நிதிசார் மீளாய்வு

இ.வி.ப. ஆனது 2018 ஆம் ஆண்டிற்கான மொத்தப் பாதுகாப்புச் செலவுகளுக்கென பாதிடப்பட்ட ஏற்பாடு இல.ரூ. 43,200.44 மில்லியனை ஆரம்பத்தில் பெற்றுக்கொண்டது. அதனைத் தொடர்ந்து, மேலதிய செயற்பாட்டுக் கிரயத்தை பிரதிநிதித்துவப்படுத்தி குறைநிரப்பு ஏற்பாடுகள் வடிவத்தில் இல.ரூ. 627.40 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. எனவே, மொத்த நிகர ஏற்பாடு இல.ரூ. 43,827.84 மில்லியனாக இருந்தது. ஆண்டிற்கான உண்மையான மொத்தப் பாதுகாப்புச் செலவு இல.ரூ. 41,481.86 மில்லியனாக இருந்தது. இதில் இல.ரூ. 34,624.00 மில்லியன் மீண்டுவரும் செலவுகளையும் இல.ரூ. 6,857.86 மில்லியன் மூலதனச் செலவுகளையும்


பிரதிநிதித்துவம் செய்கின்றன. எவ்வாறாயினும், 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் உண்மையான செலவினம் 4.79% இனால் அதிகரித்திருந்ததன் காரணமாக மொத்த நிகர ஏற்பாடு 9.70% இனால் அதிகரித்திருந்தது. எவ்வாறிருப்பினும், 2018 ஆம் ஆண்டின் ஒட்டுமொத்தப் பாதுகாப்புச் செலவு பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்பட்ட மொத்த ஏற்பாடுகளினுள்ளேயே தொடர்ந்தும் காணப்பட்டதுடன் அதன் மொத்தக் கட்டுப்பாடும் இலங்கை நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் மேற்கொள்ளப்பட்டது.




உரு 1

### (2) நிதிசார் செயலாற்றுகை

2018 ஆம் ஆண்டிற்கான இ.வி.ப. இன் மொத்த தொகுக்கப்பட்ட வருமானம் இல.ரூ. 42,526.69 மில்லியன் ஆகும். இது வருமானப் பெறுவன வுகள் இல.ரூ.74.57 மில்லியனையும் வருமானமல்லாத பெறுவனவுகள் இல.ரூ. 42,452.11 மில்லியனையும் உள்ளடக்குகிறது. மொத்தத் தொகுக்கப்பட்ட வருமானமானது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 5.37% இனால் அதிகரித்திருக்கிறது.




உரு 2


## (a) வருமானப் பெறுவனவுகள்

2018 ஆம் ஆண்டிற்கான இ.வி.ப. இன் வெறும் வருமானப் பெறுவனவுகள், வரியற்ற வருமானமும் ஏனையவையுமாகும். வரியற்ற வருமானமானது 2018 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இல.ரூ. 173 மில்லியனாக உண்மையில் மதிப்பிடப்பட்டிருந்த விமான வாடகையை மாத்திரம் உள்ளடக்கியதாகும். எவ்வாறாயினும், ஆண்டின் காலப்பகுதியில் மதிப்பீட்டுப் பெறுமதியானது 2018 ஆம் ஆண்டின் இறுதியில் இல.ரூ. 80.05 மில்லியனாகத் திருத்தப்பட்டிருந்தது. சேகரிக்கப்பட்ட நிலுவையாகவிருந்த வருமானத்தையும் உள்ளடக்கி மொத்த விமான வாடகைகளாக இல.ரூ. 74.58 மில்லியன் பதிவுசெய்யப்பட்டது.

<u>எதிர்வுகூறப்பட்ட வருமானமும் உண்மையான வருமானமும்</u>

| வருமானக் குறியீடு | 2018 ஆம் ஆண்டிற்காக திருத்தப்பட்ட பாதீட்டு வருமானம் (இல.ரூ.மில்.) | 2018 ஆம் ஆண்டிற்கான உண்மை வருமானம் (இல.ரூ. மில்.) | வித்தியாசம் (இல.ரூ.மில்.) |
|---|---|---|---|
| 20-03-02-16 | 80.05 | 74.58 | 5.47 |

அட்டவணை – 1




உரு 3


## (b) வருமானமல்லாத பெறுவனவுகள்

2018 ஆம் ஆண்டிற்கான இ.வி.ப. இன் பிரதான பெறுவனவுகள் இல.ரூ.42,526.69 மில்லியன் தொகையான வருமானமல்லாத பெறுவனவுகள் ஆகும். 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது இல.ரூ. 2,240 மில்லியனால் அதிகரித்திருக்கிறது.

வருமானமல்லாத பெறுவனவுகள் திறைசேரி கட்டுநிதிகள், வைப்புகள், முற்பணக் கணக்கு மற்றும் ஏனைய பெறுவனவுகள் முறையே இல.ரூ. 39,448.19 மில்லியன், இல.ரூ. 442.85 மில்லியன், இல.ரூ. 401.42 மில்லியன் மற்றும் இல.ரூ. 2,159.65 மில்லியன் ஆகியவற்றைக் கொண்டிருக்கின்றன.

## (c) இ.வி.ப. செலவுகள்

2018 ஆம் ஆண்டிற்கான இ.வி.ப. இன் மொத்தச் செலவு இல.ரூ. 41.481.86 மில்லியன் ஆகும். இது மீண்டுவரும் செலவுகள் இல.ரூ. 34,624 மில்லியனையும் மூலதனச் செலவுகள் இல.ரூ. 6857.86 மில்லியனையும் பிரதான பேரேட்டுச் செலவுகள் இல.ரூ. 701.49 மில்லியனையும் உள்ளடக்கியுள்ளது. இதற்கிணங்க, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டிற்கான இ.வி.ப. இன் மொத்தச் செலவு 10% இனால் அதிகரித்திருக்கிறது.





உரு 4

## (d) மீண்டுவரும் செலவுகள்

2018 ஆம் ஆண்டிற்கான இ.வி.ப. இன் மீண்டுவரும் செலவாக இல.ரூ. 36,512.60 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இது தனிநபர் ஊதியங்களுக்கான தொகையான இல.ரூ.29,271.00 மில்லியனையும் ஏனைய மீண்டுவரும் கட்டணங்களுக்கான தொகை யான இல.ரூ.7,241.60 மில்லியனையும் உள்ளடக்கியுள்ளது. 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிலையான சொத்துக்களின் கையகப்படுத்தல், இயலுமையைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றுக்காக சம்பளங்கள் மற்றும் கூலிகளிலிருந்து ஏனைய மீண்டுவரும் கட்டணங்களுக்காக நி.ஒ.வி. 66 மற்றும் நி.ஒ.வி. 69 இன்படி, இல.ரூ. 1,362.80 மில்லியன் தொகை மாற்றப்பட்டிருந்தது. இதிலிருந்து, இல.ரூ. 706.00 மில்லியன் வேறு மீண்டுவரும் கட்டணங்களுக்கு மாற்றப்பட்டதுடன் மீதித் தொகையான இல.ரூ. 656.80 மில்லியன் பொருட்களைக் கட்டளையிடு வதற்காக மூலதனச் செலவுக்கு மாற்றப்பட்டிருந்தது. நி.ஒ.வி. 66 மற்றும் நி.ஒ.வி. 69 இன்படி மாற்றப்பட்டிருந்த தொகையுடன் சேர்த்து மொத்த நிகர ஏற்பாடாக இல.ரூ.35,855.80 காணப்பட்டதாயினும் உண்மையான செலவினமாக இல.ரூ.34,624.00 காணப்பட்டது. மொத்த மதிப்பீடுகளுக்கும் அரசாங்க ஒதுக்கீடுகளின் ஊடாக நிதியளிப்புச் செய்ய எதிர்பார்க்கப்பட்டது. திறைசேரிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட மொத்த மதிப்பிடப்பட்ட செலவு பின்வரும் செலவின உருப்படிகள் தொடர்பில் காணப்பட்டது

| | இல.ரூ.(மில்) |
|---|---|
| தனிநபர் ஊதியங்கள் | 29,271.00 |
| ஏனைய மீண்டுவரும் செலவுகள் | 7,241.60 |
| நி.ஒ.வி. 66 மற்றும் நி.ஒ.வி. 69 இன்படி மாற்றப்பட்டவை | (656.80) |
| மொத்தம் | 35,855.80 |
| திருத்தப்பட்ட (குறைநிரப்பு) மீண்டுவரும் ஏற்பாடு | இல்லை |
| குறைநிரப்பு ஏற்பாட்டுடனான மொத்த நிகர ஏற்பாடு | 35,855.80 |





உரு 5

## (e) மூலதனச் செலவு

i. இலங்கை விமானப் படையானது தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தல், மூலதனச் சொத்துக்களின் கையகப்படுத்தல், படைச் சேவையினர் மற்றும் சிவில் ஊழியர்களின் இயலுமையைக் கட்டியெழுப்பல் ஆகிய நோக்கங்களுக்காக மொத்த மூலதனச் செலவு ஏற்பாடாக இல.ரூ. 6,687.84 மில்லியனைப் பெற்றுக் கொண்டது. 2018 ஆம் ஆண்டின் காலப்பகுதியில் குறைநிரப்பு ஏற்பாட்டின் வடிவில் இல.ரூ.627.40 மில்லியன் வழங்கப்பட்டது. மேலுள்ளதற்கு மேலதிகமாக, மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தலுக்காக இல.ரூ.55 மில்லியன், நிலையான சொத் துக்களின் கையகப்படுத்தலுக்காக இல.ரூ.526.80 மில்லியன், இயலுமைகளைக் கட்டியெழுப்புவதற்காக இல.ரூ.145.00 மில்லியன் என்ற அடிப்படையில் நி.ஒ.வி. 66 மற்றும் நி.ஒ.வி. 69 இன் படி, சம்பளங்கள் மற்றும் கூலிகளிலிருந்து இல.ரூ. 656.80 மில்லியனும் ஏனைய மூலதனச் செலவிலிருந்து இல.ரூ.70.00 மில்லியனும் கிடைக்கப்பெற்றன. எவ்வாறாயினும், நி.ஒ.வி. 66 மற்றும் நி.ஒ.வி. 69 இன் படி மாற்றப்பட்ட தொகை மற்றும் வழங்கப்பட்ட குறைநிரப்பு ஏற்பாட்டுத் தொகை ஆகியவற்றுடன் திறைசேரியால் அங்கீகரிக்கப்பட்ட மொத்த மூலதன வழங்கல் இல.ரூ.7,972.04 மில்லியனாக இருந்தது. 2018 ஆம் ஆண்டிற்கான மொத்த நிகர ஏற்பாடானது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 7.76% இனால் குறைவடைந்திருக் கிறது. அதற்கிணங்க, 2018 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மூலதன ஏற்பாடு பின்வருமாறு˙

| | இல.ரூ(மில்) |
|---|---:|
| மூல ஏற்பாடு | 6,687.84 |
| குறைநிரப்பு ஏற்பாடு | 627.40 |
| நி.ஒ.வி. 66, நி.ஒ.வி. 69 இற்கிணங்க மாற்றப்பட்டவை | 656.80 |
| திருத்தப்பட்ட மூலதன ஏற்பாடு | 7,972.04 |




உரு - 6

ii. மேலும், 2018 ஆம் ஆண்டிற்கான உண்மையான செலவினம் இல.ரூ. 6,857.86 ஆக இருந்தது. இது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 23.93% அதிகரிப்பாகும்.

iii. <u>மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும் மேம்பாடும்</u>

இலங்கை விமானப் படை தனது நிலைத்திருக்கத்தக்க சொத்துத் தளங்களைப் பேணுதல் மற்றும் அதன் தடையற்ற செயற்பாடு ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு ஆண்டின் காலப்பகுதியில் மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்கு இல.ரூ.2இ549.00 மில்லியனை எதிர்வுகூறியிருந்தது. ஆண்டின் காலப்பகுதியில் மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்காக நி.ஒ.வி. 66 மற்றும் நி.ஒ.வி. 69 இன்படி இல.ரூ.55.00 மில்லியன் தொகை மாற்றப்பட்டிருந்தது. இதன் காரணமாக மொத்த நிகர ஏற்பாடு இல.ரூ.2,604.00 ஆக உயர்வடைந்தது. 2018 ஆம் ஆண்டிற்கான மொத்த ஏற்பாடானது 2017 ஆம் ஆண்டிற்கான ஏற்பாட்டுடன் ஒப்பிடுகையில் சிறிதளவு அதிகரிப்பைப் பதிவுசெய்திருக்கிறது. 2018 ஆம் ஆண்டிற்கான உண்மையான செலவினம் இல.ரூ.2,003.59 மில்லியனாக இருந்தது.

iv. <u>நிலையான சொத்துக்களின் கொள்வனவு</u>

பிரதானமாக தளபாடங்கள், உபகரணங்கள் மற்றும் பார இயந்திரங்களை வழங்கும் பொருட்டு நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கான இலங்கை விமானப் படையின் ஆரம்ப ஏற்பாடு இல.ரூ.3,218.84 மில்லியன் ஆக இருந்தது. நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காக திறைசேரி ஓர் ஆரம்ப ஒதுக்கீடாக இல.ரூ. 3,218.84 மில்லியனுக்கு அங்கீகாரம் வழங்கியிருந்தது. அதனைத் தொடர்ந்து, நி.ஒ.வி. 66 மற்றும் நி.ஒ.வி. 69 இன் பிரகாரம் சம்பளங்கள் மற்றும் கூலிகளிலிருந்து நிலையான சொத்துக்களின் கொள்வனவுக்காக இல.ரூ. 526.80 மில்லியன் மாற்றப்பட்டதுடன் குறைநிரப்பு ஏற்பாடுகள் வடிவத்தில் இல.ரூ. 27.40 உம் வழங்கப் பட்டது. இதன் விளைவாக நிகர ஒதுக்கீடு இல.ரூ. 3,773.04 ஆக இருந்தது. 2018 ஆம் ஆண்டிற்கான உண்மையான செலவு இல.ரூ. 3,580.99 ஆகும்.

v. <u>இயலுமையைக் கட்டியெழுப்பல்</u>

மூலதனச் செலவின் கீழ், இலங்கை விமானப் படை ஆனது இயலுமையைக் கட்டியெழுப்புவதற்காக ஆரம்பத்தில் இல.ரூ. 450.00 மில்லியனை எதிர்வுகூறியிருந்தது. எவ்வாறா யினும், நி.ஒ.வி. 66 மற்றும் நி.ஒ.வி. 99 இன் படி மாற்றப்பட்ட இல.ரூ. 145.00 மில்லியன் மூலம் மொத்த நிகர ஏற்பாடு இல.ரூ. 595.00 மில்லியனாக அதிகரித்தது. 2018 ஆம் ஆண்டிற்கான உண்மையான செலவு இல.ரூ. 577.92 மில்லியனாக இருந்தது.


vi. <u>ஏனைய மூலதனச் செலவுகள்</u>

மூலதனச் செலவின் கீழ், இலங்கை விமானப் படை ஆனது குறைநிரப்பு ஏற்பாடாக வழங்கப்பட்ட இல.ரூ. 600.00 மில்லியனுடன் ஏனைய மூலதனச் செலவுகளிலிருந்து நி.ஒ.வி. 66 மற்றும் நி.ஒ.வி. 99 இன் படி மாற்றப்பட்ட இல.ரூ. 70.00 மில்லியனையும் சேர்த்து மொத்த நிகர ஏற்பாடாகக் காணப்பட்ட இல.ரூ. 1000.00 மில்லியனுக்கு எதிராக ஏனைய மூலதனச் செலவாக இல.ரூ. 695.36 மில்லியன் தொகையினைச் செலவு செய்திருந்தது.

vii. <u>மீண்டுவரும் செலவு வகைகளின் கீழ் ஏற்பாடுகளுக்கு எதிரான செலவுகள்</u>

| உருப்படி விபரம் | நிகர ஏற்பாடு (இல.ரூ. மில்) | செலவு (இல.ரூ.மில்) | வேறுபாடு |
|---|---|---|---|
| தனியாள் ஊதியங்கள் | 27,908.20 | 27,506.37 | 401.83 |
| ஏனைய மீண்டுவருதல்கள் | 7,947.60 | 7,117.63 | 829.97 |
| மொத்தம் | 35,855.80 | 34,624.00 | 1,231.80 |

அட்டவணை – 2





உரு - 7

viii. வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்குகள் தொடர்பான மூலதனச் செலவின வகைகளின் கீழ் ஏற்பாடுகளுக்கு (ஒவ்வொரு விடயக் குறியீட்டிற்கும்) எதிரான செலவினம்

| தொகுதிக் குறியீடு | உருப்படி விபரம் | நிகர ஏற்பாடு (இல.ரூ.மில்.) | செலவினம் (இல.ரூ.மில்) | வேறுபாடு (இல.ரூ.மில்.) |
|---|---|---|---|---|
| | மூலதனச் சொத்துக்க-ளின் புனரமைப்பும் மேம்பாடும் | | | |
| 2001 | கட்டடமும் கட்டமைப்பும் | 162.00 | 155.60 | 6.40 |
| 2002 | பொறி, இயந்திரம் மற்றும் உபகரணம் | 2317.00 | 1,739.20 | 577.80 |
| 2003 | வாகனம் | 125.00 | 108.80 | 16.20 |
| | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | | | |
| 2101 | வாகனம் | 647.08 | 647.03 | 0.05 |
| 2102 | தளபாடமும் பொருத்துகளும் | 93.00 | 89.29 | 3.71 |
| 2103 | பொறி, இயந்திரம் மற்றும் உபகரணம் | 910.00 | 877.61 | 32.39 |
| 2104 | கட்டடமும் கட்டமைப்பும் | 2,122.96 | 1967.06 | 155.90 |
| 2401 | இயலுமையைக் கட்டியெழுப்பல் | 595.00 | 577.92 | 17.08 |
| 2509 | ஏனைய மூலதனச் செலவுகள் | 1,000.00 | 695.36 | 304.64 |
| மொத்தம் | | 7,972.04 | 6,857.87 | 1,114.17 |

அட்டவணை – 3




உரு - 8

ix. முற்பணக் கணக்கு “B” தொடர்பில் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்கு எதிரான உண்மை நிலை

இலங்கை விமானப் படை அரச அலுவலர்களுக்குக் கடன் வழங்குவதற்கான ஒரு முற்பணக் கணக்கினைக் கொண்டிருக்கிறது. ஆண்டின் காலப்பகுதியில் இ.வி.ப. ஆல் தொகுக்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட முற்பணக் கணக்கு எல்லைகளும் இக்கணக்கின் செயற்பாடுகளும் கீழே

| விபரம் | நடப்பு வருடம் குறித்துரைக்க-ப்பட்ட எல்லை (இல.ரூ.மில்) | நடப்பு வருட உண்மையான தொகை (இல.ரூ.மில்) | வேறுபாடு (இல.ரூ.மில்) |
|---|---|---|---|
| இல:22401 முற்ப-ணக் கணக்கு “B” | | | |
| உயர்ந்தபட்ச செலவு எல்லை | 520.00 | 384.25 | 135.75 |
| குறைந்தபட்ச பெறுவனவு எல்லை | 396.00 | 401.41 | (5.41) |
| உயர்ந்தபட்ச வரவு எல்லை | 1இ000.00 | 289.44 | 710.56 |

அட்டவணை – 4




உரு - 9

x. 2018 ஆம் ஆண்டிற்கான இ.வி.ப. இன் நிதிக் கூற்றுக்கள்

2018 ஆம் ஆண்டிற்கான இ.வி.ப. இன் நிதிக் கூற்றுக்கள் கணக்கீட்டு (AO) உத்தியோகத்தராலும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராலும் (CAO) முறையே 2019 பெப்ரவரி 26 மற்றும் 28 ஆந் திகதிகளில் அதிகாரமளிக்கப்பட்டன.

## g. உள்ளகக் கட்டுப்பாடுகள், நிதிசார் முகாமைத்துவ முறைமைகள் மற்றும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கம்

### (1) முகாமைத்துவ உறுதிப்பாடுகள்

நிதி, திட்டமிடல் அமைச்சினது கொள்கைகளும் ஒழுங்குவிதிகளும், இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பயனுறுதிமிக்க வகையிலும் வினைத்திறனாகவும் சிக்கனமாகவும் நேர்மையுடனும் இடம்பெறுவதை உறுதிப்படுத்துவதற்காக, முகாமைத்துவக் கட்டுப்பாடுகளில் கிரய விளைதிறன் முறைமைகளைப் பரந்தளவில் தாபிப்பதற்கு சகல திணைக்களங்களையும் தேவைப்படுத்துகின்றன. முகாமையின் சகல மட்டங்களும் சகல திணைக்களத் தொழிற்பாடுகள் மீதுமான போதுமானளவு கட்டுப்பாடுகளை உறுதிப்படுத்து வதற்கு பொறுப்புடையனவாகும். “

### (2) இலங்கை சனநாயக, சோசலிஷக் குடியரசு அரசாங்கத்தின் நிதிசார் ஒழுங்குவிதிகள்

(a) இலங்கை சனநாயக, சோசலிஷ குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளின் நோக்கங்களை நிறைவேற்றுகின்ற பயனுறுதிமிக்க உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் நிதி முகாமைத்துவ முறைமைகள் ஆகியவற்றைத் தாபித்துப் பராமரிப்பது நிதி, திட்டமிடல் அமைச்சின் பொறுப்பாகும். இ.வி.ப. ஆனது செயற்பாடுகளின் வினைத்திறன் மற்றும் விளைதிறன் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளில் அதன் மதிப்பீடுகளை நடத்துவதுடன் அவை உள்ளகக் கட்டுப்பாடுகளுக்கான நிதி ஒழுங்கு விதிகளின்படியான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள், அரச சட்டங்கள்

மற்றும் சுற்றறிக்கைகள், பெறுகை வழிகாட்டல் முகாமைத்துவப் பொறுப்புடைமை ஆகியவற்றுடன் இணக்கமாவதையும் மதிப்பிடுகிறது. இந்த மதிப்பீடுகளின் பேறுகளின் அடிப்படையில், இ.வி.ப. ஆனது செயற்பாடுகளின் விளைதிறன் மற்றும் வினைத்திறன் மீதான அதன் உள்ளகக் கட்டுப்பாடுகளுக்கும் பொருத்தமான சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள், மற்றும் 1992 இல் விநியோகிக்கப்பட்ட நிதி ஒழுங்கு விதிகளின் நோக்கங்களை நிறைவேற்றிய நிதிசார் முகாமைத்துவ முறைமைகள் ஆகியவற்றுடன் இணக்கமாவதற்கும் நியாயமானளவு உறுதிப்பாட்டினை வழங்க முடியும்.

(b) மேலும், சொத்துக்களின் பாதுகாப்பு மற்றும் பொருத்தமான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கம் ஆகியவற்றை உள்ளடக்கிய நிதிசார் அறிக்கையிடல் மீதான விளைதிறன்மிக்க உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தாபிப்பதும் பேணுவதற்கும் முகாமை பொறுப்புடையதாகும். இ.வி.ப. ஆனது நிதி ஒழுங்குவிதிகளுக்கு இணங்கவும் உரிய திறைசேரிச் சுற்றறிக்கைகளுக்கு இணங்கவும் நிதிசார் அறிக்கையிடல் மீதான அதன் உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய விளைதிறன்மிக்க மதிப்பீட்டினை நடத்துகிறது. இந்த மதிப்பீட்டின் பேறுகளின் அடிப்படையில், இ.வி.ப. 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிசார் அறிக்கையிடல் மீதான அதன் உள்ளகக் கட்டுப்பாடு விளைதிறன்மிக்கதாக தொழிற்பட்டது என்பதற்கான நியாயமானளவு உறுதிப்பாட்டினை வழங்க முடியும். அத்துடன் இ.வி.ப. ஆனது நிதிசார் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டின் செயற்பாட்டிலோ அல்லது வடிவமைப்பிலோ எவ்வித பொருண்மைசார் பலவீனங் களையும் கண்டுபிடிக்கவில்லை. ஆதனம் மற்றும் நிதிசார் அறிக்கை யிடலுக்கான கணக்கீட்டுடன் தொடர்புடைய பொருண்மைசார் பலவீனங்களை கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காளர்கள் அறிக்கையிட்டமை பற்றி இ.வி.ப. மகிழ்வடைகிறது. இ.வி.ப. தனது உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான மதிப்பீடுகளில் அதே போன்ற பலவீனங்களை அடையாளம் கண்டிருந்த போதிலும் அவற்றை பொருண்மைசார் பலவீனங்கள் எதிர் குறிப்பிடத்தக்க குறைபாடுகளாக வகைப்படுத்தியிருந்தது. நாங்கள் இத்தகைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அவர்களுடன் சேர்ந்து பணிகளைத் தொடர்வோம்.

(c) அதன் உள்ளார்ந்த வரையறைகள் காரணமாக, நிதிசார் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு, எவ்வாறு நன்றாக வடிவமைக்கப்பட்டாலும் நிதிசார் அறிக்கையிடல் நோக்கங்களை அடைவதில் முற்றுமுழுதான உத்தரவாதத்தினை வழங்க முடியாது என்பதுடன் தவறுகளைத் தடுக்கவோ அல்லது கண்டுபிடிக்கவோ முடியாதிருக்கலாம். எனவே, நிதிசார் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு விளைவுத்திறன் வாய்ந்ததாக இருக்குமெனத் தீர்மானிக்கப் பட்டாலும்கூட நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் முன்வைப்பு தொடர்பில் நியாயமானளவு உறுதிப்பாட்டினை மாத்திரமே வழங்கக் கூடியதாக இருக்கும். எதிர்கால காலப்பகுதிகளுக்கான விளைவுத் திறன்கள் பற்றிய ஏதாவது மதிப்பீட்டின் எறிவுகள், சூழ்நிலைகளில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக அல்லது, கொள்கைகள் அல்லது நடைமுறைகளுடனான இணக்கத்தின் தன்மை ஆகியன மோசமடையக் கூடும் என்பதால் கட்டுப்பாடுகள் போதுமானதாக இல்லாமல் போகலாம்.

(d) விமானப் படையின் முகாமைத்துவ சபைப் பணிப்பாளர்களின் (யுகுடீஆ) உறுதிப்பாட்டுக் கூற்றுக்கள் மற்றும் நடவடிக்கைகளுக்கான முறைமைசாரா கொடுப்பனவுகளுக்குரிய எங்களது மீளாய்வு ஆகிய வற்றுடன், நிதி ஒழுங்குவிதிகளின் பிரதான பொறுப்புக்கூறல் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகவும்

நிதிசார் ஒழுங்குவிதிகளின் பொறுப்புக்கூறல் நோக்கங்களை அடைவதிலுள்ள குறிப்பிடத்தக்க இடர்களைக் குறைப்பதற்காகவும் நியாயமானளவு உறுதிப்பாட்டினை வழங்குவதற்கு உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய எங்களது மதிப்பீடுகள் இ.வி.படையை அனுமதிக்கின்றன.

## h. பணிப்பகங்கள் மற்றும் கட்டளைப் பிரிவுகளின் 2018 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகையின் பொழிப்பு

### (1) வான் நடவடிக்கைகள் பணிப்பகம்

#### (a) அறிமுகம்

i. இலங்கை விமானப் படையின் செயற்பாட்டுத் தடங்கள் வான் நடவடிக்கைகள் பணிப்பகத்தின் ஆதிக்கவரம்பினுள் வருகின்றன. பணிப்பகமானது வான் நடவடிக்கைகள், வான் பாதுகாப்பும் வான் போக்குவரத்துக் கட்டுப்பாடும் மற்றும் தீயணைப்பு விடயங்களுக்குப் பொறுப்புடையதாக இருக்கிறது.

ii. வான் நடவடிக்கைகள் பணிப்பகத்தின் ஒட்டுமொத்தப் பாதீடு இல.ரூ. 60.92 மில்லியனாகும். இது விமானக் காப்புறுதி, தீயணைப்பு, ATC மற்றும் வான்களப் பாதுபாதுகாப்பு ஆகிய பிரதான தலைப்புகளின் கீழ் வருகின்ற முக்கிய நடவடிக்கை களை உள்ளடக்குகிறது.

iii. 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில், பணிப்பகமானது இ.வி.ப. யின் 2018ஆம் ஆண்டிற்கான வருடாந்த நடவடிக்கைத் திட்டத்தில் எறிவுசெய்யப்பட்டிருந்த நடவடிக்கைகளில் பெரும் பாலானவற்றைப் பூர்த்தி செய்திருந்தது.

#### (b) வருடாந்த நடவடிக்கைத் திட்டத்துடன் உண்மையான செயற் பாடுகளை ஒப்பீடு செய்தல்

i. <u>தீயணைப்பு</u>

பின்வரும் நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டன. விபரங்கள் பின்வருமாறு:

| நடவடிக்கை | உண்மையான கிரயம் (ரூ.) |
|---|---:|
| குழாய் இணைப்புகளின் விநியோகம் (Ea-40) | 304,000.00 |
| 28 வலய அட்டை (Ea-01) | 178,250.00 |
| தீயணைப்பான்கள் (Ea-25) | 113,600.00 |
| தீ அலாரத்தின் பற்றறி (Ea-16) | 48,900.00 |
| GI வாளி (Ea-100) | 110,000.00 |
| Rubber Biding (M-30) | 3,300.00 |
| உயர் அழுத்தமுள்ள குழாய் (M-20) | 13000.00 |
| 08 வலய பெனல் பலகை (Ea-02) | 173,650.00 |
| இ.வி.ப. தளம் கட்டுநாயக்கா தீயணைப்பு Fire SVP | 240,000.00 |
| மொத்தம் | 1,184,700.00 |

ii. 2018 ஆம் ஆண்டின் வான் நடவடிக்கைகள் தொடர்பான நடவடிக்கைச் செயற்பாடுகள்

(i). 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில், இ.வி.ப. ஆனது VVIP/VIP போக்குவரத்து, துருப்புகள்/பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்து, வான் கண்காணிப்பு, வர்த்தகரீதியான வான் போக்குவரத்து, நாட்டின் ஒரேயொரு இராணுவ வான் படை என்ற வகையில் தேசத்திற்கான அதன் கடப்பாடு ஆகியவற்றை முன்னெடுப்பதற்காக விமானத்தின் பல்வேறு தொகுதி களையும் இயக்கியுள்ளது. இருந்தபோதிலும் விமான சக்தியைப் பொறுத்தவரை, சகோதர சேவைகளுக்கு (இலங்கை இராணுவம், இலங்கை கடற்படை மற்றும் பொலிஸ்) நெருக்கமான இடைவினை உதவியை வழங்குவதும் மேலுள்ள பணிகளுக்குச் சமமான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது.


(ii). பின்வரும் பிரதான வகைகளின் கீழ் 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மொத்தமாக 14,645.14 பறப்பு மணித்தியாலங்கள் பறக்கப்பட்டுள்ளன:

| நடவடிக்கை வகை | பறப்பு மணித்தியாலம் |
|---|---|
| நடவடிக்கைகள் | 4,448.40 |
| கூட்டு நடவடிக்கைகள் | 112.20 |
| வெளிநாட்டு நடவடிக்கைகள் | 2,077.55 |
| பயிற்சி | 6,412.19 |
| ஏஏஜீ | 618.15 |
| ஏஜீ | 220.15 |
| வர்த்தகரீதியானவை | 117.50 |
| வெளிநாடு | 20.00 |
| ஏனையவை | 617.40 |
| மொத்தம் | 14,645.14 |

(iii). கடந்த ஐந்து (5) வருடங்களுக்கான பறப்பு மணித்தியாலங்களின் ஒப்பீடு பின்வருமாறு

| நடவடிக்கை வகை | ஆண்டு | | | | |
|---|---|---|---|---|---|
| | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
| நடவடிக்கைகள் | 2,224.24 | 3,700.00 | 6,961.93 | | 4,448.40 |
| கூட்டு நடவடிக்கைகள் | - | - | - | - | 112.20 |
| வெளிநாட்டு நடவடிக்கைகள் | - | - | - | - | 2,077.55 |
| பயிற்சி | 8,270.35 | 5,023.30 | 6,588.00 | 5,875.38 | 6,412.19 |
| VVI | 422.35 | 382.00 | - | 601.30 | 618.15 |
| VIP | 676.50 | 167.40 | - | 281.35 | 220.15 |
| வர்த்தகரீதியானவை | 1,582.40 | 427.30 | 396.20 | 278.35 | 117.50 |
| வெளிநாடு | 42.50 | 21.10 | | - | 20.00 |
| ஏனையவை | - | - | - | 5,685.50 | 617.40 |
| மொத்தம் | 13,218.34 | 9,721.10 | 13,946.13 | 12,721.88 | 14,645.14 |

உரு 10




(iv). 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வர்த்தக ரீதியான உள்நாட்ட விமானப் போக்குவரத்து ஊடாகச் சம்பாதித்த வருமானத்திலிருந்து தேசிய திறைசேரிக்கு மொத்தமாக இல.ரூ. 74.57 மில்லியன் வரவு வைக்கப்பட்டது.

iii. 2018 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பறத்தல் செயற்பாடுகளும் அதனுடன் சம்பந்தப்பட்ட ஏனைய நடவடிக்கைகளும்

(i). .தீயணைப்பு நடவடிக்கைகள் (பெப்பி பக்கெட் நடவடிக்கை)

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இ.வி.ப. வான் மற்றும் தரைச் சொத்துக்களைப் பயன்படுத்தி தீயணைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தது. இது தொடர்பில் பறப்பில் ஈடபட்ட மொத்த பறப்பு மணித்தியாலங்கள் 4.20 ஆகும். இலங்கை விமானப் படை பம்பி பக்கெற்றுடனான பெல் 212 ரக ஹெலிகொப்டர் ஒன்றினையும் தீயணைப்பு அணியினருட னான தீயணைப்பு வாகனங்களையும் 2018 அக்டோபர் 11 ஆந் திகதி பெலவத்தை, பத்தரமுல்லையிலுள்ள கூல் பிளெனெட் கட்டடத்தில் ஏற்பட்ட தீயை அணைப் பதற்கு உதவுவதற்காக நிலைநிறுத்தியிருந்தது. பெல் 212 ஹெலிகப்டர் அணியினர் பம்பி பக்கெட்டை காவிச் செல்வதன் கீழ் 17 தடவை தொடர்ச்சியான பறப்பில் ஈடுபட்டதுடன் அருகிலுள்ள கட்டடங்களுக்கும் தீ பரவுவதைத் தடுத்து நிறுத்தினர்.




(ii). விசேட தேடுதல் நடவடிக்கை

இ.வி.ப. ஆனது தேவைப்பட்ட போதெல்லாம் குடியியல் சமுதாயத் திற்கு உதவுவதற்காக இலங்கை கடற்படை (SLN) மற்றும் அனர்த்த முகாமைத் துவ நிலையம் (DMC) ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் காணாமற்போன மீன்பிடிப் படகுகள், ஆட்கள் மற்றும் எண்ணைக் கசிவு ஆகியவற்றை இடப்படுத்துவதற்காக 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விசேட தேடல் நடவடிக்கையினை முன்னெடுத்திருந்தது. இதற்காகப் பறப்பிலீடுபட்ட மொத்தப் பறப்பு மணித்தியாலங்கள் 18.05 ஆகும்.



(iii) MEDIVAC விமானப் போக்குவரத்து

இ.வி.ப. ஆனது உயர் மட்டப் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தும் அதே வேளை குறுகிய கால அறிவித்தலொன்றினுள் சிவில் சமுதாயத்தினரிடமிருந்து கிடைக்கின்ற கோரிக்கையின் மீது MEDIVAC விமானப் போக்குவரத்தினை முன்னெடுத்திருந்தது. இதற்காகப் பறப்பிலீடுபட்ட மொத்தப் பறப்பு மணித்தியாலங்கள் 11.25 ஆகும்.

(iv) <u>வெள்ள நிவாரணப் பணி</u>

இ.வி.ப. ஆனது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு உதவும் பொருட்டு 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விசேட வேவுப் பணிகளை முன்னெடுத் திருந்தது. இதற்காகப் பறப்பிலீடுபட்ட மொத்தப் பறப்பு மணித்தியாலங்கள் 12.25 ஆகும்.

(v) <u>இடர்மீட்புப் பணி</u>

இ.வி.ப. ஆனது முல்லைத்தீவிலுள்ள தித்தன்குள அணைக்கட்டு உடைப்பெடுத்தபோது ஆறு (6) விவசாயிகளை மீட்டிருந்தது. இதற்காகப் பறப்பிலீடுபட்ட மொத்தப் பறப்பு மணித்தியாலங்கள் 01.25 ஆகும்.

(vi) பசிபிக் ஏஞ்சல் நடவடிக்கை – 2018 (HCA)

பசிபிக் பிராந்தியத்தில் தேவைப்படுகின்ற பகுதிகளுக்கு



மனிதாபிமான குடியுரிமை உதவி (HCA) மற்றும் குடியியல் இராணுவ நடவடிக்கை களைக் (CMO) கொண்டு வருவதற்கு வடிவமைக்கப் பட்ட அமெரிக்க பசிபிக் கட்டளையால் (USPACOM) வழங்கப்படும் கூட்டு / ஒருங்கிணைந்த மனிதாபிமான உதவிப் பணியான “பசிபிக் ஏஞ்சல் - 2018” நடவடிக்கையானது இ.வி.ப. இன் உதவியுடன் வவுனியா, அநுராதபுரம், சிகிரியா ஆகிய பிரதேசங்களில் 2018 ஆகஸ்ட் 6 ஆந் திகதியிலிருந்து 20 ஆந் திகதி வரை நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சித் திட்டமானது பிரதானமாக சிவிலியன்களுக்கு ஆரம்ப நிலை சுகாதாரப் பராமரிப்பை வழங்குதல், உடல்நிலை சிகிச்சை, கண் பரிசோதனை மற்றும் பல் சம்பந்தமான பரிசோதனைகளை மேற்கொள்ளல் என்பவற்றைக் கவனத்திற் கொண்டிருந்தது. பங்களாதேஷ் விமானப

படை, மாலைதீவு பாதுகாப்புப் படை, நேபாள இராணுவம், இ.வி.ப. இன் மருத்துவ.்.பல்மருத்துவ அலுவலர்கள் மற்றும் தாதிகள் ஆகியோரின் பங்கேற்புடன் பசிபிக் விமானப் படைகளின் தொழில்சார் வைத்தியர்களின் கூட்டு அணி ஒன்றினால் பொருத்தமான மருத்துவச் சிகிச்சைகள் வழங்கப்பட்டன. வவுனியா தாதியர் பாடசாலையின் தாதிய மாணவர்களின் ஒரு அணியும் செஞ்சிலுவைச் சங்கமும் செயலாற்றுநர்களாக பங்குபற்றி உதவியிருந்தனர்.

(vii) <u>பசிபிக் பங்குடமை – 2018 (HADR நடவடிக்கை)</u>

பசிபிக் பங்குடமை – 2018 என அழைக்கப்படும் மனிதாபிமான உதவி மற்றும் அனர்த்த நிவாரண நடவடிக்கை ஆனது இ.வி.ப. மற்றும் இ.க.ப. ஆகியவற்றின் ஒத்துழைப் புடன் 2018 மே 2 ஆந் திகதி தொடக்கம் 7 ஆந் திகதி வரை (அமெரிக்க பசிபிக் விமானப் படை கட்டளை) PACOM இனால் நடத்தப்பட்டது. இ.வி.ப. ஆனது பெல் 212 ரக உலங்குவானூர்திகளைப் பயன்படுத்தி USNS ஆநசஉல ளூனி இலிருந்து ஆநுனுநுஏயுஊ வெளியேற்றல் பயிற்சிகளை முன்னெடுத்திருந்தது.



(viii) <u>70 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் இலங்கை விமானப் படையின் செயற்பாடு</u>

இ.வி.ப. யின் வான் நடவடிக்கைகள் பணிப்பகம் ஆனது ஒரு பெல் 212 ரக விமானம், மூன்று பெல் 412 ரக விமானங்கள், நான்கு எம்.ஐ. 17 ரக விமானங்கள், ஐந்து செஸ்னா 150 ரக விமானங்கள், மூன்று பி.ரி.6 ரக விமானங்கள், நான்கு வை 12 ரக விமானங்கள், இரண்டு பி 200 ரக விமானங்கள், ஒரு சி 30 ரக விமானம், ஒரு ஏஎன் 32 ரக விமானம், ஒரு எம்ஏ 60 ரக விமானம், மூன்று கே8 ரக விமானங்கள், ஒலு கிபீர் விமானம், மூன்று எப்7 விமானங்கள் ஆகியவை உள்ளிட்ட 30 விமானங்களை உள்ளடக்கியதாக விமான அணிவகுப்பினை நடத்தி யிருந்தது. ஒரு கிபீர் விமானம் இ.வி.ப. வான்வழிக் காட்சி அந்தத்தைக் குறித்தவாறு காலிமுகத்திடல் வான்பரப்பு ஊடாகப் பறந்திருந்தது.



(ix) விமானப் படைக் கண்காட்சி - 2018

இலங்கை விமானப் படையின் 67 ஆவது ஆண்டு நிறைவை யொட்டி நிகழ்த்தப்பட்ட விமானக் கண்காட்சி மற்றும் கல்விக் கண்காட்சி களின் வரிசையில் 2018 மார்ச் 05 ஆந் திகதி அம்பாறை இ . வ ி . ப . நிலையத்தில் விமானப் படைக் கண்காட்சி – 2018 நடத்தப்பட்டது.




(x) "SAMVEDNA" பயிற்சி – பன்முக ர்யுனுசு பறப்பு / கள நிலைகள் - இந்தியா

SAMVEDNA பயிற்சி என்பது 2018 மார்ச் 12 ஆந் திகதியிலிருந்து 16 ஆந் திகதி வரை இந்தியாவிலுள்ள திருவனந்தபுரத்தில் அமைந்துள்ள தென் மண்டல விமானக் கட்டளைத் தலைமையகத்தில் திட்டமிடப்பட்ட பன்முக விமானப் படை



மனிதாபிமான உதவி மற்றும் அனர்த்த நிவாரண (HADR) பயிற்சி ஆகும். இதில் தென்கிழக்காசிய மற்றும் IOR பிராந்திய நாடுகளைச் சேர்ந்த விமானப் படைகளில் இருந்து பங்கேற்றிருந்தனர். இந்நடவடிக்கையானது டேபிள் - டொப் அதேபோன்று பறத்தல் / களப் பயிற்சி ஆகிய இரண்டையும் உள்ளடக்கியிருந்தது. டேபிள் - டொப் மற்றும் பறத்தல் / கள நிலை பயிற்சிகள் என்பன முறையே HQ SAC மற்றும் 17 FBSU என்பவற்றில் நடத்தப்பட்டன. இந்த விமானப் பயிற்சியில் இ.வி.ப. ஆளணியினர் ஒரு ஏஎன் - 32பி விமானத்துடன் இந்திய விமானப் படையினது (IAF) அழைப்பின் பேரில் கலந்து கொண்டிருந்தனர்.

(xi) MINUSCA இல் இலங்கை விமானப் போக்கு வரத்துப் பிரிவினால் பொருட்கள் எடுத்துச் செல்லும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது



மத்திய ஆபிரிக்கக் குடியரசில் ஐக்கிய நாடுகள் பன்மைத்துவ ஒருங்கிணைந்த நிலைப்படுத்தல் பணியில் இலங்கை விமானப் போக்குவரத்துப் பிரிவானது 2018 மார்ச் 29 ஆந் திகதி விபத்தில் சிக்கிய பிரான்ஸ் ஆளில்லா ஏரியல் வாகனத்தை (UAE) மீட்கும் பொருட்டு பொருட்கள் காவிச் செல்லும் நடவடிக்கையினை வெற்றிகரமான முன்னெடுத்திருந்தது.

(xii) இ.வி.ப. ஆல் மிஹிந்தலைக்கு புத்தரின் பாதச் சுவடு கொண்டுசெல்லப்பட்டமை

அநுராதபுர இ.வி.ப. தளத்திலுள்ள 6 ஆம் இலக்கப் படையணி 2018 யூன் 10 ஆந் திகதி விமானத்தின் மூலம் மிஹிந்தலைக்கு புத்தரின் பாதச் சுவட்டைக் கொண்டு செல்லும் நடவடிக்கையை முன்னெடுத்திருந்தது. பாதச் சுவடானது ரஜரட்ட பல்கலைக்கழக மைதானத்திலிருந்து பொதியிடப்பட்டு மிஹிந்தலை விகாரையில் ''மெதமலுவ'' விற்கு எம்ஐ 171 எஸ்எச் உலங்குவானூர்தி மூலம் எடுத்துச்செல்லப்பட்டது.



(xiii) விமானப் படையின் சிறியளவான கண்காட்சி 2018

இலங்கை விமானப் படையின் சிறியளவான கண்காட்சி – 2018 இல் விமானக் கண்காட்சி மற்றும் கல்விக் கண்காட்சி என்பன வீரவில இலுள்ள இ.வி.ப. நிலையத்தில் 2018 யூலை 20 ஆந் திகதி விமானப் படைத் தளபதியால்




உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. இந்தக் கண்காட்சியானது இ.வி.ப. இராணுவத் திறனையும் அதேபோன்று தேசிய ரீதியிலும் பிராந்திய நிலப்பரப்பிலும் அதன் வகிபாகத்தைக் கையாள்வதற்கான அதன் இயலுமையையும் காண்பித் திருக்கும். இது தனது இருப்புகளிலுள்ள பல்நோக்கு விமானச் சொத்துக்களை வெளிப்படுத்தும் என்பதுடன் இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட அனர்த்தங்கள் அதேபோன்று சர்வதேச நிலப் பரப்பை நிலைப்படுத்த உதவுவதிலும் மனிதாபிமான உதவிகளை வழங்குவதில் உள்ள சிக்கலான வகிபாகங்களில் அதன் இயலுமையை மக்களுக்கு நிரூபிக்கும்.

(xiv) கடுமையான சுகவீனம் மற்றும் காயப்பட்ட நோயாளிகளைக் கொண்டுசெல்வது தொடர்பான பயிற்சி

நோயாளிகள் போக்குவரத்தில் ஆகாய மார்க்கமாக வெளியேறும் சூழலில் விமான சக்தியானது ஒரு வல்லமை மிக்க சக்தியாக விளங்குகிறது.



இது படையினர் மாத்திரமன்றி சிவிலியன்களினதும் உயிர்களைக் காப்பாற்றுவதற்காக இலங்கை விமானிகளும் அவர்களின் அணியினரும் பல பறப்புக்களை இலங்கையில் இடம்பெற்ற பயங்கரவாத யுத்த காலத்தில் மேற்கொண்டிருந்தமை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டிருக்கிறது. நடப்பு காலப் பகுதியில் இ.வி.ப. ஆனது அவசர நோயாளர் அலகிற் குரிய அமைப்புடன் கடுமையாக சுகவீனமுற்றிருக்கும் நோயாளிகளை காவுகின்ற இயலுமையைக் கொண்ட பெல் ரக உலங்குவானூர்திகளுக்கு பொருத்தப்பட்ட ஒரு பிரத்தியேக medevac தொகுதியுடன்கூடிய நாட்டில் உள்ள ஒரேயொரு இயக்குநராக வான்வழி மருத்துவ ரீதியான வெளியேற்றத்தில் முதன்மையானதொரு வகிபாகத்தை எடுத்திருக்கிறது.

இலங்கை விமானப் படையானது இலங்கை மயக்க மருந்தியல் மற்றும் தீவிர சிகிச்சைக் கல்லூரியுடன் இணைந்து இரத்மலானை இலங்கை விமானப் படைத் தளத்தில் 2018 ஆகஸ்ட் 02 ஆந் திகதி பயிற்சித் துரப்பணம் ஒன்றினை முன்னெடுத்திருந்தது.

(xv) <u>ப்ளூ ஸ்பியர் நடவடிக்கை - இணைந்த விமானப் பயிற்சியும் இலக்கு சுடுதலும்</u>

இ.வி.ப. இன் போராளிகள் மற்றும் மற்றும் போர் ஆதரவுச் செயற்பாட்டுச் சொத்துக்களின் தற்போதைய வலிமையை இனங்காணும் நோக்கில், இ.வி.ப. ஆனது வில்பத்து வனத்தின் தென் பகுதி மற்றும் இ.வி.ப. சுடுதல் எல்லை கல்பிட்டி ஆகியவற்றின் பொதுப் பிரதேசத்தில் 2018 யூன் 18 மற்றும் 19 ஆந் திகதி களில் இலக்குச் சுடுதல் பயிற்சியுடன் இணைந்ததாக சிறியளவிலான விமானப் பயிற்சியை முன்னெடுத்திருந்தது. 13 விமானங்கள், ராடார் படையணிகள், விமானத் தொகுதியினர், சுளுகு மற்றும் ஆதரவு ஆளணியினர் ஆகியோர் இப்பயிற்சி யினைப் பாதுகாப்பாகவும் வெற்றிகரமாகவும் முன்னெடுக்கப் பங்களித்திருந்தனர்.



(xvi) <u>பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு குதிரைகளை கொண்டுவருதல்</u>

இரு நாடுகளுக்குமிடையிலான நட்புறவின் ஒரு பகுதியாக, பாகிஸ்தான் இலங்கை விமானப் படைக்கு இலவசமாக 06 குதிரைகளை வழங்கியிருந்தது. இந்த நல்லினக் குதிரைகள் பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் நகரிலிருந்து இ.வி.ப. இன் சி-130 விமானத்தின் மூலம் 2018 யூன் 26 ஆந் திகதி இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டன.



(xvii) <u>JMSDF உடனான கூட்டு கடல்வழிப் பயிற்சி</u>

இ.வி.ப. உம் இ.க.ப. உம் யப்பான் கடல்வழி சுய பாதுகாப்புப் படையுடன் (JMSDF) இணைந்து 2018 ஆகஸ்ட் 5 ஆந் திகதி கூட்டு கடல்வழி பயிற்சி ஒன்றினை ஒழுங்கு செய்திருந்தது. கடற் படையினர் தங்களது கடற்படைச் சொத்துக் களை நிலைநிறுத்தி பயிற்சித் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கியதற்கிணங்க, துஆளுனுகு இற்குச் சொந்தமான PC- 3 முசழைெ நீண்ட தூர



.கடல்வழி கண்காணிப்பு விமானம் மற்றும் மற்றும் இ.வி.ப. இற்குச் சொந்தமான B - 200 மத்திம தூர விமானம் என்பன பயிற்சியின் ஒரு பகுதியாக மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திலிருந்து கிழக்குக் கடற்பகுதிக்கு இயக்கப்பட்டது. இந்த விமானப் பயிற்சி நடைபெறும்போது இ.வி.ப. மற்றும் இ.க.ப. உடன் கடல்வழிக் கண்காணிப்புக்கான மேம்பட்ட நுட்பங்கள் பரிமாறப்பட்டன.

(xviii) பறப்புப் பயிற்றுவிப்பாளர்களுக்கான வேலைப் பட்டறை – 2018

சகல பறப்புப் பயிற்றுவிப்பாளர்களும் தமது முதலாவது விமானப் பயணத்தை அனுபவித்திருந்த சீனக்குடா, இ.வி.ப. அக்கடமியிலுள்ள 1 ஆம் இலக்க பறப்புப் பயிற்சிப் பிரிவில் பறப்புப் பயிற்று விப்பாளர் வேலைப் பட்டறை – 2018 ஆனது 2018 ஆகஸ்ட் 18 மற்றும் 19 ஆந் திகதிகளில் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டது. நிலையான மற்றும் சுழலும் இறக்கைகளைக் கொண்ட விமானங்களின் சகல பறப்பு பயிற்றுவிப்பாளர்களும் இந்த வேலைப்பட்டறையில் கலந்து கொண்டிருந்தனர். இந்நிகழ்வில், பறப்புப் பயிற்சியுடன் தொடர்புடைய பல விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டதுடன் பறத்தல் பயிற்சி யின் மிகவுயர்ந்த நியமங்களைத் தக்கவைப்பதற்கான முக்கிய தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.




(xix) தென் சூடானில் உதவி நடவடிக்கைப் பயிற்சி

தென் சூடானிலுள்ள ஐக்கிய நாடுகள் பணியில் உள்ளோர் அவர்களது கன்னி நடவடிக்கையாக "உதவி நடவடிக்கை" இனை 2018 செப்ரெம்பர் 11 ஆந் திகதி இலங்கை விமானப் போக்குவரத்து அலகின் உதவியுடன் முன்னெடுத்திருந்தது. இங்கு சிகிச்சைக்காக அருகிலுள்ள வைத்தியசாலைக்கு, நைல் நதியில் இயக்கப்படுகின்ற பரிசலில் இருந்து நோயாளி ஒருவரை மீட்டுக் கொண்டுசெல்வது போன்று இப்பயிற்சி உருவகப்படுத்தப்பட்டது.



(xx) <u>நீர்க்காக்கை தாக்குதல் கூட்டு நடவடிக்கை 2018 – குச்சவெளி</u>

நீர்க்காக்கை தாக்குதல் 2018 என்ற கூட்டு நடவடிக்கையின் இறுதிக் கட்டம் குச்சவெளியில் 2018 செப்ரெம்பர் 26 ஆந் திகதி நடைபெற்றது. இலங்கை விமானப் படையானது வான்



குறுக்கீட்டுப் பணிகள், சுபை யனெ Drop, CASEVAC, வான் தாக்குதல்கள் மற்றும் பிரித்தெடுப்புப் பணிகள் போன்றவை உள்ளிட்ட வான் நடவடிக்கை களை முன்னெடுத்திருந்தது.

(xxi) <u>இ.வி.ப. ஆல் விமான ஓடுபாதைகளில் "வெதர் புத்தி" என்ற தன்னியக்க வானிலை கண்காணிப்பு முறைமைகள் தொடங்கி வைக்கப்பட்டன.</u>

"வெதர் புத்தி" வானிலை நிலையம் என்பது காற்று திசை, காற்றின் கதி, வெப்பநிலை, அழுத்தம், ஈரப்பதன் மற்றும் மழை மானி ஆகிய ஆறு (6) உணரிகளைக் கொண்டுள்ள தன்னியக்க வானிலை நிலையமாகும். இது கம்பியில்லா உள்ளக தரவு வாங்கி அலகிற்கு நிகழ்நிலை வானிலைத் தரவுகளை அனுப்புகின்ற இயலுமையைக் கொண்டிருக்கிறது. மேலும், இணையத்தளம் அல்லது அன்ரொயிட் செயலி ஊடாக உலகத்திலுள்ள எந்தவொரு இடத்திலிருந்தும் வானிலை விபரங்களை அணுகுவதற்கு வசதியேற்படுத் துமுகமாக வலையமைப்பு சேவையகத்திற்கு வானிலை விபரங்கள் பதிவேற்றப்படுகின்றன. முறைமையானது மீள் மின்னேற்றக்கூடிய மின்கலம் மற்றும் சூரிய கலம் ஆகியவற்றினால் மின்னேற்றப்படுகிறது. விமானப் படைத் தளபதியின் ஆலோசனையின் பேரில், இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்புப் பொறியியல் பிரிவானது தற்போது ஆறு (6) வானிலை நிலையங்களை நிறுவி, பின்வரும் இ.வி.ப. ஓடுதளங்களில் அவற்றை நிறுவி யிருக்கிறது.

- இ.வி.ப. அக்கடமி சீனக்குடா
- இ.வி.ப. தளம் அநுராதபுரம்
- இ.வி.ப. தளம் ஹிங்குராக்கொடை
- இ.வி.ப. நிலையம் பலாலி
- இ.வி.ப. நிலையம் கட்டுக்குருந்த
- இ.வி.ப. நிலையம் வீரவில




(xxii) <u>இ.வி.ப. முதல்முறையாக வான்வழி விதைப் பந்துகளை வீசும் நடவடிக்கையினை மேற்கொண்டது</u>

இ.வி.ப. முதல்முறையாக வான்வழி விதைப் பந்துகளை வீசும் நடவடிக்கை யினை 2018 டிசெம்பர் 12 ஆந் திகதி நொச்சியாகம பிரதேசத்தில் மேற் கொண்டது. இ.வி.ப. முழு இலங்கையையும் உள்ளடக்கிய வகையில் காடுகளை மீட்பதற்கான பல முயற்சிகளில் துடிப்புடன் பங்கேற்றிருந்தது. விதைப் பந்துகளை வீசுகின்ற முன்னோடிச் செயற்றிட்டத்தில்



இ.வி.ப. யின் பங்கேற்பானது தொடர்ச்சியானதும் இந்தப் பெரு முயற்சிக்கான அதனது அர்ப்பணிப்பின் பற்றுடையதாகவும் இருக்கிறது. வான் சக்தியின் முறையான பாவனை ஊடாக தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்ற இ.வி.ப. ஆனது நாட்டின் எதிர்காலச் சந்ததியினருக்காக ஓர் உண்மையான பசுமை எதிர்காலத்தை உறுதிப்படுத்துவதற்கு தமது பங்களிப்பை நிறைவேற்றும் பொருட்டு வான் சக்தியை உரிய நேரத்திலும் அவசியமான தயார்நிலையிலும் வைத்திருப்பதற்கு முடியுமாக இருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறது.

## (2) தரை நடவடிக்கைகள் பணிப்பகம்

### (a) அறிமுகம்

தரை நடவடிக்கைகள் பணிப்பகமானது 2014 பெப்ரவரி 28 ஆந் திகதி மீளமைக்கப்பட்டது. இ.வி.ப. ரெஜிமென்ட் ஆனது எதிரியினால் ஏற்படுத்தப்படுகின்ற எந்தவொரு உள்ளக / வெளிவாரியான வலிந்த தாக்குதல்களைத் தடுத்தல் மற்றும், நடவடிக்கைகளுக்கான இ.வி.ப. இன் முக்கிய விமானச் சொத்துக்கள் மற்றும் தாபிப்புகளை பாதுகாத்தல் ஆகிய நோக்கங்களுடனான தரை நடவடிக்கைகள் பணிப்பகத்தின் கீழ் 29 பிரிவுகளைக் கொண்டிருக்கிறது.

(b) உண்மையான செயலாற்றுகையை வருடாந்த நடவடிக்கைத் திட்டத்துடன் ஒப்பிடுதல்

2018 ஆம் ஆண்டிற்கான தரை நடவடிக்கைகள் பணிப்பகத்தின் பாதுகாப்பு உபகரணம் மற்றும் பாதுகாப்புப் பொருட்கள் கொள்வனவு, வெடிபொருட்கள் அகற்றல் (EOD) உபகரணம், பரசூட் உபகரணம், ரெஜிமென்டல் விசேட படை உபகரணம் மற்றும் விமான நாய் மருத்துவ உபகரணம் ஆகியவற்றை உள்ளடக்கியதான ஒட்டுமொத்தப் பாதீடு இல.ரூ. 21.99 மில்லியன் ஆகும்.

(c) 2018 ஆம் ஆண்டிற்கான AAP இற்கு எதிரான உண்மையான செயலாற்றுகை

வருடாந்த நடவடிக்கைத் திட்டத்திலுள்ள (AAP) பின்வரும் முன்மொழியப்பட்டுள்ள நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளன.

| AAP இன்படி முன்மொழியப்பட்ட நடவடிக்கை | உண்மையான கிரயம் (இல.ரூ.மில்.) |
|---|---|
| விமான நாய்களுக்குரிய மருந்துகள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | 0.84 |
| போர் உபகரணங்களின் பழுதுபார்ப்பு | 2.82 |
| பாதுகாப்பு உபகரணங்களின் கொள்வனவு | 0.33 |
| EOD உபகரணம் மற்றும் பரா உபகரணத்தின் பராமரிப்பு | 0.63 |
| குண்டு செயலிழப்பு மற்றும் பரா உபகரணங்களின் கொள்வனவு | 9.93 |
| பாதுகாப்புப் பொருட்களின் கொள்வனவு | 3.15 |
| பாதுகாப்புப் பொருட்கள் SVP | 3.67 |
| விமான நாய் மருத்துவ உபகரணம் SVP | 0.25 |
| விமான நாய் மருத்துவ உபகரணம் RPC | 0.30 |
| மொத்தம் | 22.92 |

(d) AAP 2018 இல் எறிவுசெய்யப்பட்டதைவிட 2018 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட வேறு நடவடிக்கைகள்

| நடவடிக்கை வகை | உண்மையான கிரயம் (இல.ரூ. மில்.) |
| --- | --- |
| குண்டு செயலிழப்புச் செய்யும் உபகரணத்தின் கொள்வனவு | 7.42 |
| பராபொயில் பரசூட்டின் கொள்வனவு | 15.10 |

## (3) வானூர்திப் பொறியியல் பணிப்பகம்

### (a) அறிமுகம்

தரமான பொறியியல் நடைமுறைகள் பிரயோகத்தினூடாக விமானப் போக்குவரத்துக்கு ஏற்றவாறும் பறத்தல் பாதுகாப்பை உறுதிப்படுத்தியவாறும் ளடுயுகு விமானத் தொகுதியைப் பராமரிப்பதற்கு வானூர்திப் பொறியியல் பணிப்பகம் பொறுப்பாக உள்ளது. SLAF இன் இருப்புப்பட்டியல் 27 வகைகளான 107 விமானங்களைக் கொண்டிருக் கின்றது. மேலும், இந்த 107 விமானங்களையும் 61 நிலையான இறக்கை விமானங்களாகவும் 46 உலங்குவானூர்திகளாகவும் பிரிக்கலாம்.

(b) வானூர்திப் பொறியியல் பணிப்பகத்தின் மொத்தப் பாதீடானது பிரிக்கப்பட்ட மிகப்பெரிய தொகையான 115,391.08 மில்லியன் இலங்கை ரூபாய்கள் ஆகும். விமான என்ஜின், கியர் பெட்டி, இறக்கையும் கருவிகளும், பிரி – 6 முதன்மை விமானங்கள் 06 இன் கொள்வனவு, AOF (சீனா) இன் தாபிப்பு, விமானப் பராமரிப்பு, விமான உதிரிப் பாகங்களின் கொள்வனவு போன்றவற்றுடன் தொடர்புடைய பணிகளை முன்னெடுப்பதற்காக இந்த ஒட்டுமொத்தப் பாதீட்டையும் பயன்படுத்த பணிப்பகத்தால் திட்டமிடப்பட்டிருந்தது. பாதீட்டு ஒதுக்கீடு இலங்கை ரூபா. மில். 4,882.33 மற்றும் குறைநிரப்பு ஏற்பாடு இல.ரூபா. மில். 110,508.75 ஆகிய வழிகளில் நிதியைப் பெற பணிப்பகம் எதிர்பார்த்திருந்தது. நடவடிக்கையிலுள்ள சில எறிவுகள் பயனுள்ள வகையில் உருவாக்கப்பட்டுள்ளபோதும் ஏனைய சில எறிவுகள் பல காரணங்களால் நடைபெறவில்லை.

### (c) செயலாற்றுகை

i. <u>விமானப் பராமரிப்பு</u> – 2018 ஆம் ஆண்டில் விமானப் பராமரிப்புக்கென மொத்தமாக இல.ரூ. 1,018.15 மில்லியன் பயன்படுத்தப்பட்டது. இதில் விமான உதிரிப் பாகங்கள் மற்றும் விமான நுகர்வுப் பொருட்களின் கொள்வனவுகளுக்கான இல.ரூ. 575.91 மில்லியனும் எஞ்சின் மற்றும் இறக்கைகள் அத்துடன் விமானக் கருவிகள் மற்றும் சோதனை உபகரணங்களுக்கான இல.ரூ. 442.24 மில்லியனும் உள்ளடங்குகின்றன.

ii. <u>பழுதுபார்ப்பும் முழுமைத் திருத்தமும்</u> - விமானப் பழுதுபார்ப்பு மற்றும் சுத்திகரிப்புக்காக 2018 ஆம் ஆண்டில்

மொத்தமாக இல.ரூ. 1,466.53 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. இதில் பாரியளவு விமானத் திருத்தங்களுக்கான தொகையான இல.ரூ. 1,466.12 மில்லியனும் விமானக் கருவிகளின் அளவுதிருத்தல் மற்றும் பழுதுபார்ப்புத் தொகையான இல.ரூ. 0.41 மில்லியனும் உள்ளடங்குகின்றன.

iii. <u>01 ஆம் இலக்க பறப்புப் பயிற்சிப் பிரிவு (FTW)இ இலங்கை விமானப் படை அக்கடமி, சீனக்குடா</u>

இப்படையணி 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் PT-6 விமானம், Cessna-150 விமானம், K-8 விமானங்கள் மீது பல்வேறுபட்ட சுத்திகரிப்பு வேலைகளை முன்னெடுத்திருந்தது. இப்படையணி 25 மணித்தியால சுத்திகரிப்புகள் 45, 100 மணித்தியால சுத்திகரிப்புகள் 8, 300 மணித்தியால சுத்திகரிப்புகள் நான்கு (4) மற்றும் 400 மணித்தியால சுத்திகரிப்புகள் இரண்டு (2) ஆகியவற்றை மேற்கொண்டிருந்தது. மேலும், இப்படையணியானது 50 மணித்தியால சுத்திகரிப்புகள் இருபத்தாறு (26), 100 மணித்தியால சுத்திகரிப்புகள் 17 மற்றும் 200 மணித்தியால சுத்திகரிப்புகள் பத்து (10) ஆகியவற்றையும் முன்னெடுத்திருந்தது. மேலுள்ளவற்றுக்கு மேலதிகமாக, PT – 6 விமானத்திற்கான மேலதிக பதினைந்து (15) சுத்திகரிப்புகளும் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் 50 மணித்தியால சுத்திகரிப்புகள் ஏழு (7), 125 மணித்தியால சுத்திகரிப்புகள் மூன்று (3), 150 மணித்தியால சுத்திகரிப்புகள் மூன்று (3) மற்றும் 250 மற்றும் 500 மணித்தியால சுத்திகரிப்புகள் ஒவ்வொன்றும் உள்ளடங்குகின்றன.

iv. <u>02 ஆம் இலக்கப் படையணி, இலங்கை விமானப் படை, கட்டுநாயக்கா</u>

இப்படையணி 2018 ஆம் ஆண்டில் AN – 32B மற்றும் C - 130 ரக விமானங்களில் பல்வேறு சுத்திகரிப்புகளை மேற் கொண்டிருந்தது. படையணியானது 300 மணித்தியால சுத்திகரிப்புகள் 2 ஐயும் 900 மணித்தியால சுத்திகரிப்புகள் ஒன்றையும் (1) முன்னெடுத்திருந்தது. மேலும், படையணியானது C – 130 விமானத்திற்கான ஒவ்வொரு 06 மாத சுத்திகரிப்பையும் M2, M3 சுத்திகரிப்பையும் PDM விரிவாக்கல் சுத்திகரிப்பையும் முன்னெடுத்திருந்தது. மேலுள்ளவற்றுக்கு மேலதிகமாக, 2018 ஆம் ஆண்டில் AN32B ரக விமானங்கள் 03 இற்கான பாரிய விமானப் பழுதுபார்ப்புகளையும் C – 130 விமானம் 1 இற்கான பாரிய விமானப் பழுதுபார்ப்புகளையும் இப்படையணி முன்னெடுத்திருந்தது.

v. <u>04 ஆம் இலக்க VIP/VVIP உலங்குவானூர்திப் படையணி, இலங்கை விமானப் படை - இரத்மலானை</u>

2018 ஆம் ஆண்டில், 04 ஆம் இலக்க VIP/VVIP உலங்கு வானூர்திப் படையணி, இ.வி.ப. இரத்மலானை ஆனது பெல் 412 / 412EP உலங்குவானூர்திகள், பெல் 212 உலங்கு வானூர்திகள் மற்றும் எம்ஐ – 171E ஆகியவற்றின் விமானச் சுத்திகரிப்புகள் 87 இனை மேற்கொண்டிருந்தது. இது 25 மணித்தியால சுத்திகரிப்புகள், 50 மணித்தியால சுத்திகரிப்புகள், 100 மணித்தியால சுத்திகரிப்புகள், 300 மணித்தியால சுத்திகரிப்புகள், 500 மணித்தியால சுத்திகரிப்புகள், 600 மணித்தியால சுத்திகரிப்புகள் மற்றும் 1000 மணித்தியால சுத்திகரிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

vi. <u>05 ஆம் இலக்கப் படையணி, இலங்கை விமானப் படை, கட்டுநாயக்கா</u>

2018 ஆம் ஆண்டின் காலப்பகுதியில், 05 ஆம் இலக்கப் படையணி, இ.வி.ப.கட்டுநாயக்கா ஆனது F – 7, FT – 7BS மற்றும் F – 7GS விமானங்களின் விமானச் சுத்திகரிப்புகள் 63 இனை முன்னெடுத்திருந்தது. இது என்ஜின் 25 மணித்தியால சுத்திகரிப்பு, என்ஜின் 50 மணித்தியால சுத்திகரிப்பு, Airframe/E & I 50 மணித்தியால சுத்திகரிப்பு, Airframe/E & I 100 மணித்தியால சுத்திகரிப்பு, 06 மாத சுத்திகரிப்பு மற்றும் அரிப்புக் கட்டுப்பாட்டு சேவை ஆகியவற்றை உள்ளடக்குகிறது.

vii. <u>06 ஆம் இலக்க உலங்குவானூர்திப் படையணி, இலங்கை விமானப் படை, அநுராதபுரம்</u>

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில், அநுராதபுரம் இ.வி.ப. 06 ஆம் இலக்க உலங்குவானூர்திப் படையணியால் எம்ஐ – 17 ரக உலங்குவானூர்தியின் 30 விமானச் சுத்திகரிப்புகள் முன்னெடுக்கப்பட்டன. இது 25 மணித்தியாலப் பரிசீலனை, 50 மணித்தியாலப் பரிசீலனை, 50 மணித்தியாலச் சுத்திகரிப்பு, 100 மணித்தியாலச் சுத்திகரிப்பு, 200 மணித்தியாலச் சுத்திகரிப்பு மற்றும் 300 மணித்தியாலச் சுத்திகரிப்பு ஆகியவற்றை உள்ளடக்குகிறது.

viii. <u>07 ஆம் இலக்க உலங்குவானூர்திப் படையணி, இ.வி.ப., ஹிங்குராக்கொடை</u>

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில், ஹிங்குராக்கொடை இ.வி.ப. 07 ஆம் இலக்க உலங்குவானூர்திப் படையணியால் பெல் 206 மற்றம் பெல் 212 உலங்குவானூர்திகளின் 91 விமானச் சுத்திகரிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. இது 03 மாத துருப்பிடித்தல் தடுப்புப் பராமரிப்பு, 25 மணித்தியால சுத்திகரிப்பு, 50 மணித்தியால சுத்திகரிப்பு, 100 மணித்தியால சுத்திகரிப்பு, 300 மணித்தியால சுத்திகரிப்பு, 600 மணித்தியால சுத்திகரிப்பு மற்றும் 1000 மணத்தியால சுத்திகரிப்பு ஆகியவற்றை உள்ளடக்குகிறது.

ix. <u>08 ஆம் இலக்க மென்ரக போக்குவரத்துப் படையணி, இ.வி.ப., இரத்மலானை</u>

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில், இரத்மலானை இ.வி.ப. 08 ஆம் இலக்க மென்ரக போக்குவரத்துப் படையணி Y-12II, Y-12 IV மற்றும் Beech King விமானம் ஆகியவற்றின் 454 விமானச் சுத்திகரிப்புகளை முன்னெடுத்திருந்தது. இது 07 நாள் சுத்திகரிப்பு, 100 மணித்தியால சுத்திகரிப்பு, 200 மணித்தியால சுத்திகரிப்பு, 400 மணித்தியால சுத்திகரிப்பு, 800 மணித்தியால சுத்திகரிப்பு, 1200 மணித்தியால சுத்திகரிப்பு, 200 மணித்தியாலம் (கட்டம் I), 400 மணித்தியாலம் (கட்டம் II) மற்றும் 600 மணித்தியாலம் (கட்டம் III) சுத்திகரிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

**x.** <u>09 ஆம் இலக்க தாக்குதல் உலங்குவானூர்திப் படையணி, இ.வி.ப., ஹிங்குராக்கொடை</u>

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில், ஹிங்குராக்கொடை இ.வி.ப. 09 ஆம் இலக்க தாக்குதல் உலங்குவானூர்திப் படையணி Mi-24/Mi-35 மற்றும் Mi – 171SH உலங்கு வானூர்திகளின் 33 விமானச் சுத்திகரிப்புகளை முன்னெடுத் திருந்தது. இது 25 மணித்தியால சுத்திகரிப்பு, 50 மணித்தியால சுத்திகரிப்பு, 100 மணித்தியால சுத்திகரிப்பு மற்றும் 300 மணித்தியால சுத்திகரிப்பு ஆகியவற்றை உள்ளடக்குகிறது.

xi. <u>10 ஆம் இலக்க சண்டைப் படையணி, இ.விப., கட்டுநாயக்கா</u> 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில், கட்டுநாயக்கா இ.வி.ப. 10 ஆம் இலக்க சண்டைப் படையணி கிபீர் விமானத்தின் 67 விமான சுத்திகரிப்புகளை முன்னெடுத்திருந்தது. இது 07 பறப்பற்ற நாள் சுத்திகரிப்பு, 15 பறப்பற்ற நாள் சுத்திகரிப்பு, 30 பறப்பற்ற நாள் சுத்திகரிப்பு, 25 மணித்தியால சுத்திகரிப்பு, 100 மணித்தியால சுத்திகரிப்பு, என்ஜின் 25 மணித்தியால சுத்திகரிப்பு மற்றும் என்ஜின் 50 மணித்தியால சுத்திகரிப்பு ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

படையணியின் பொறியியல் இயலுமையை உயர்த்தி யதன் காரணமாக மனோ தொடுகருவி, மின்பிறப்பாக்கி கட்டுப்பாட்டு அலகு, ஒட்சிசன் சீராக்கி மற்றும் அழுத்தக் கட்டுப்பாட்டு வால்வு என்பன படையணியில் பழுதுபார்க்கப் பட்டது. இதன் மூலம் குறிப்பிடத்தக்களவு வெளிநாட்டு நாணயம் சேமிக்கப்பட்டிருந்தது.

xii. <u>111 ஆம் இலக்க ருயுஏ படையணி, இ.வி.ப., வவுனியா</u>

111 ஆம் இலக்க ருயுஏ படையணியால் 2018 ஆம் ஆண்டு நெடுகிலும் ளுநயசஉாநச MK II UAV இன் பராமரிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இது 06 வார பேணிக்காத்தல் சுத்திகரிப்பு, இடது மற்றும் வலது இறக்கை யுளளல Removed மற்றும் வுயடை Assembly Removed ஆகியவற்றை உள்ளடக்குகிறது.

xiii. <u>61 ஆம் இலக்க விமானப் போக்குவரத்து, இ.வி.ப., இரத்மலானை</u>

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில், இரத்மலானை இ.வி.ப. 61 ஆம் இலக்க விமானப் போக்குவரத்துப் படையணியானது MI-171E இன் 45 விமானச் சுத்திகரிப்புகளை முன்னெடுத்திருந்தது. இது 25 மணித்தியால பரிசீலனை, 50 மணித்தியால சுத்திகரிப்பு, 100 மணித்தியால சுத்திகரிப்பு, 300 மணித்தியால சுத்திகரிப்பு, 500 மணித்தியால சுத்திகரிப்பு மற்றும் 1000 மணித்தியால சுத்திகரிப்பு ஆகியவற்றை உள்ளடக்கு கிறது.

xiv. <u>ஹெலிடுவர்ஸ், இ.வி.ப., இரத்மலானை</u>

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில், ஹெலிடுவர்ஸ் இ.வி.ப. இரத்மலானை ஆனது MA-60 இன் 06 விமான சுத்திகரிப்புகளை முன்னெடுத்திருந்தது. இது 03 மாத சுத்திகரிப்பு, 06 மாத சுத்திகரிப்பு, 12 மாத சுத்திகரிப்பு, 24 மாத சுத்திகரிப்பு, 36 மாத சுத்திகரிப்பு மற்றும் 72 மாத சுத்திகரிப்பு ஆகியவற்றை உள்ளடக்குகிறது.

**(d)** வானூர்திப் பொறியியல் பிரிவினால் (AEW) முன்னெடுக்கப்பட்ட உள்ளூர் பழுதுபார்ப்பு மற்றும் சுத்திகரிப்புகள் – 2018

i. <u>விசேட செயற்றிட்டம்</u> - 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில், வானூர்திப் பொறியியல் பிரிவானது உள்ளக ரீதியில் பல்வேறு பழுதுபார்ப்புகளையும் சுத்திகரிப்புகளையும் முன்னெடுத்திருந்தது. 10,000 மனித மணித்தியாலங்களைப் பயன்படுத்தி 1,000,000.00 அமெரிக்க டொலர் செலவில் 1000 மணித்தியால சுத்திகரிப்பு மேற்கொள்ளப்பட்டது.

ii. <u>நியம அறை</u> – 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சகல விமானங்கள் தொடர்பிலும் நியம அறையினால் 1009 பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இப்பணிகளுக்காக 2,295 மனித மணித்தியாலங்கள் பயன்படுத்தப்பட்டு 229,500 அமெரிக்க டொலர் செலவு செய்யப்பட்டது. இதில் கம்பிக் கயிறு கவண் / தொகு வலை கவண் பரிசீலனையும் ஆதாரச் சுமைச் சோதனையும் முறுக்குத் திருகி அளவு திருத்தல் மற்றும் இடுக்கிமானி, மைக்ரோமீற்றர் ஆகிய பணிகள் உள்ளடங்குகின்றன.

iii. <u>னுவு ஆய்வுகூடம்</u> - 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சகல விமானங்கள் தொடர்பிலும் NDT ஆய்வுகூடத் தினால் மொத்தமாக 950 பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இப்பணிகளுக்காக 1,371 மனித மணித்தியாலங்கள் பயன்படுத் தப்பட்டு 137,100 அமெரிக்க டொலர் செலவு செய்யப்பட்டது. இதில் சுழி மின்னோட்டச் சோதனை, காந்தத் துகள் சோதனை மற்றும் X-கதிர் சோதனை ஆகிய பணிகள் அடங்குகின்றன.

iv. <u>மின் பகுதி</u> – 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் விமான மின் உபகரணம் மற்றும் தரைக் கட்டுப்பாட்டு அலகு தொடர்பில் மின் பகுதியினால் மொத்தமாக 78 பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இப்பணிகளுக்காக 6,492 மனித மணித்தி யாலங்கள் பயன்படுத்தப்பட்டு 649,200 அமெரிக்க டொலர் செலவு செய்யப்பட்டது. இதில் வெப்பநிலை கட்டுப்பாட்டு வால்வு, காற்று வேக குறிகாட்டி மற்றும் தீயணைப்பு இயக்க அலகு ஆகிய பணிகள் அடங்குகின்றன.

v. <u>வீல் மற்றும் பிரேக் பகுதி</u> – 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் AN-32B, C-130, Kfir மற்றும் F-7 தொடர்பில், வீல் மற்றும் பிரேக் பகுதியினால் மொத்தமாக 39 பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இப்பணிகளுக்காக 133 மனித மணித்தி யாலங்கள் பயன்படுத்தப்பட்டு 13,300 அமெரிக்க டொலர் செலவு செய்யப்பட்டது. இதில் மெயின் / நோஸ் வீல் அவுட்டர் கவர் மாற்றீட்டுப் பணி உள்ளடங்குகிறது.

vi. பாதுகாப்பு உபகரணப் பகுதி – 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் உயிர்காப்பு அங்கி, உயிர்காப்பு தெப்பம், பரசூட், உயிர்பிழைத்தல் பொதி, தீயணைப்பு போத்தல், G அங்கி மற்றும் மிதத்தல் ஆகியவை தொடர்பில் பாதுகாப்பு உபகரணம் பகுதியினால் மொத்தமாக 2543 பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இப்பணிகளுக்காக 3842 மனித மணித்தி யாலங்கள் பயன்படுத்தப்பட்டு 384,200 அமெரிக்க டொலர் செலவு செய்யப்பட்டது. இதில் விமானப் பணியாளர் உயிர்காப்பு அங்கி, பல இருக்கைகளைக் கொண்ட உயிர்காப்பு தெப்பம், எதிர்ப்பு G அங்கி ஆகியவற்றை உள்ளடங்குகிறது.

vii. விமானப் பழுதுபார்ப்பு மற்றும் மீட்புப் பிரிவு 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் Bell- 212, Bell- 412, AN- 32B, Y-12, PT-6, MI-17, K-8, C-130, Cessna-150, B200, Bell 206 விமானங்கள் தொடர்பில் விமானப் பழுதுபார்ப்பு மற்றும் மீட்புப் பிரிவினால் மொத்தமாக 107 கட்டமைப்பு மற்றும் தொகுதிப் பழுதுபார்ப்புகள் பூர்த்தி செய்யப்பட்டன. இப்பணி களுக்காக 3,048 மனித மணித்தியாலங்கள் பயன்படுத்தப்பட்டு 304,800 அமெரிக்க டொலர் செலவு செய்யப்பட்டது.

viii. என்ஜின் பகுதி – 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் Bell 212/412, y-12, B-200, Bell 206, MI-17, MI-24, K-8, Kfir விமானங்கள் தொடர்பில் எஞ்ஜின் பகுதியினால் மொத்தமாக 180 பணிகள் பூர்த்தி செய்யப்பட்டன. இதில் PT6-3B வகை எஞ்ஜின் பணிகள், PT6A-42 வகை எஞ்ஜின் பணிகள், Oil soap check என்பன உள்ளடங்குகின்றன. இப்பணிகளுக்காக 1,527 மனித மணித்தியாலங்கள் பயன்படுத்தப்பட்டு 152,700 அமெரிக்க டொலர் செலவு செய்யப்பட்டது.

ix. உதிரிப்பாகப் பகுதி – 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் Bell 412/212, Bell 206 விமானம் தொடர்பில், உதிரிப்பாகப் பகுதியினால் மொத்தமாக 132 பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இப்பணிகளுக்காக 4,508 மனித மணித்தி யாலங்கள் பயன்படுத்தப்பட்டு 450,800 அமெரிக்க டொலர் செலவு செய்யப்பட்டது. இதில் Pylon Mount, Bell212/412 Tail Rotor Actuator, Oil Cooler Blower ஆகிய பணிகள் அடங்குகிறது.

x. கருவிகள் பகுதி – 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் Bell 412, Bell 206, Y 12, BEECHKING, C-130, AN-32B, K-8, MI-24, PT-6, C-150, F-7, Kfir விமானங்கள் தொடர்பில், கருவிகள் பகுதியினால் மொத்தமாக 504 பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இப்பணிகளுக்காக 2,003 மனித மணித்தி யாலங்கள் பயன்படுத்தப்பட்டு 200,300 அமெரிக்க டொலர் செலவு செய்யப்பட்டது. இதில் திருப்பல் மற்றும் சாய்வு குறிகாட்டி, குத்துயரமானி, Triple techo குறிகாட்டி ஆகிய பணிகள் அடங்குகின்றன.

xi. சுழலி பகுதி – 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் Bell 212, Bell 412, Bell 17 விமானங்கள் தொடர்பில், சுழலிப் பகுதியினால் மொத்தமாக 46 பணிகள் முன்னெடுக்கப் பட்டன. இப்பணிகளுக்காக 1,790 மனித மணித்தியாலங்கள் பயன்படுத்தப்பட்டு 179,000 அமெரிக்க டொலர் செலவு செய்யப் பட்டது. இதில் பிரதான சுழலி பிளேட் மற்றும் வால்ப்பகுதி சுழலி பிளேட் ஆகியன அடங்குகின்றன.

xii. ஒருங்கிணைப்புப் பகுதி – 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஒருங்கிணைப்புப் பகுதியினால் மொத்தமாக 137 தொகுதிப் பழுதுபார்ப்புப் பணிகள் பூரணப்படுத்தப்பட்டன. இப்பணிகளுக்காக 629 மனித மணித்தியாலங்கள் பயன்படுத் தப்பட்டு 62,900 அமெரிக்க டொலர் செலவு செய்யப்பட்டது.

## (e) விமானப் படை அருங்காட்சியகம் - இ.வி.ப. இரத்மலானை

i. 2018 ஆம் ஆண்டில் விமானங்களுக்குச் செய்யப்பட்ட பழுதுபார்ப்புகளும் சுத்திகரிப்புகளும்

2018 ஆம் ஆண்டில் விமானப்படை அருங்காட்சியகம் ஆனது பின்வரும் விமானங்கள் மீது பல்வேறு வகையான பழுதுபார்ப்புகளையும் சுத்திகரிப்புகளையும் மேற்கொண்டது.

- Tiger moth Aircraft (CX-123)
- Chipmunk Aircraft(CT-103)
- Chipmunk Aircraft (CT-107)
- Siai-Marchetti Aircraft (CT-123)

**ii.** இதில் 07 நாள் சுத்திகரிப்பு 45, துருப்பிடித்தல் கட்டுப்பாட்டுப் பரிசீலனை 04 மற்றும் துருப்பிடித்தல் கட்டுப்பாட்டுப் பரிசீலனை 03 என்பன உள்ளடங்குகின்றன.

## (f) 2018 ஆம் ஆண்டில் விமானங்கள் மீது செய்யப்பட்ட உள்ளூர் பழுதுபார்ப்புகளும் சுத்திகரிப்புகளும் - வானூர்திப் பொறியியல் ஆதரவுப் பிரிவு

i. விமான செலுத்தி (Propeller) பட்டறை

Y-12, B- 200, Y-12 II, IV/B-200 விமானங்கள் தொடர்பில் 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மொத்தமாக 56 பணிகள் விமானச் செலுத்திப் பட்டறையினால் பூர்த்தி செய்யப்பட்டன. இதில் முழுமைத் திருத்தம், சிறியளவான பழுதுபார்ப்பு மற்றும் முன் அந்தத்தின் பழுதுபார்ப்பு ஆகியவை அடங்குகின்றன.

ii. எஞ்சின் பட்டறை

C-150 PT-6 விமானங்கள் தொடர்பில் 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மொத்தமாக 22 பணிகள் எஞ்சின் பட்டறையினால் பூர்த்தி செய்யப்பட்டன. இதில் எயார் ஸ்ராட்டர் வால்வு சோதனை, எஞ்ஜின் 4 சிலிண்டர் மற்றும் முழுமைத் திருத்தம் என்பன அடங்குகின்றன.

iii. COM: பட்டறை

Y-12, B-200, AN-32B, C-150, K-8, PT-06 விமானங்கள் தொடர்பில் 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மொத்தமாக 277 பணிகள் COM பட்டறையினால் பூர்த்தி செய்யப்பட்டன. இதில் பழுதுபார்ப்பு, வெளிப்பக்க மூடுகை மாற்றல் மற்றும் முழுமைத் திருத்தம் என்பன அடங்குகின்றன.

iv. E & I பட்டறை

Bell-412, MI-17, K-8, Bell-212, Bell-206, PT-6, MI-17, B-200, MA-60 விமானங்கள் தொடர்பில் 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மொத்தமாக 460 பணிகள் E & I பட்டறையினால் பூர்த்தி செய்யப்பட்டன. இதில் Triple techo குறிகாட்டியின் பழுதுபார்ப்பு, Hyd Pressure Relay இன் முழுமைத் திருத்தம், தனி முனைக் குறிகாட்டியின் அளவுதிருத்தம் மற்றும் மும்முனை குறிகாட்டியின் சுத்திகரிப்பு என்பன அடங்குகின்றன.

v. கட்டமைப்புப் பழுதுபார்ப்புப் பட்டறை

MA-60, Y-12, B-200, Bell-212, Bell-412 விமானங்கள் தொடர்பில் 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மொத்தமாக 57 பணிகள் கட்டமைப்புப் பழுதுபார்ப்புப் பட்டறையினால் பூர்த்தி செய்யப்பட்டன. இதில் ஒயில் கூலர் பலகத்தின் பழுதுபார்ப்பு, பிரயாணிகள் கதவின் பழுதுபார்ப்பு, Encoder Mounting Bracket இன் பழுதுபார்ப்பு என்பன அடங்குகின்றன.

vi. அழிவற்ற சோதனை ஆய்வுகூடம்

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அழிவற்ற சோதனை ஆய்வுகூடமானது 262 காந்தத் துகள் சோதனையையும் 38 சுழல் மின்னோட்டச் சோதனையையும் 14 திரவ உட்புகச் சோதனையையும் பூர்த்தி செய்திருந்தது.

vii. பற்றரி பகுதி

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில், பற்றரி பகுதியானது கொள்ளளவுச் சோதனை மற்றும் பற்றரி பழுதுபார்ப்புகளின் 06 பணிகளை நிறைவு செய்திருந்தது.

**(g)** 2018 ஆம் ஆண்டில் விமானம் மற்றும் விமான சேவையுடன் தொடர்புடைய நடவடிக்கைகளின் அபிவிருத்தி – 01 ஆம் இலக்க பறப்புப் பயிற்சிப் பிரிவு ( FTW)

i. 2018 பெப்ரவரியில் கட்டுக்குருந்த இ.வி.ப. நிலையத்திலிருந்து ஐந்து Cessna150 விமானங்கள் சுதந்திர தின அணிவகுப்பிற்காகப் பறந்திருந்தன.







ii. 2018 பெப்ரவரியில் கட்டுக்குருந்த இ.வி.ப. நிலையத்திலிருந்து மூன்று PT – 6 விமானங்கள் சுதந்திர தின அணிவகுப்பிற்காகப் பறந்திருந்தன.

iii. 2018 பெப்ரவரியில் கட்டுநாயக்கா இ.வி.ப. தளத்திலிருந்து மூன்று K – 8 விமானங்கள் சுதந்திர தின அணிவகுப்பிற்காகப் பறந்திருந்தன.







iv. 2018 மார்ச்சில் அம்பாறை இ.வி.ப. நிலையத்திலிருந்து இ.வி.ப. இன் 67 ஆம் ஆண்டு நிறைவு விழாவிற்காக மூன்று PT – 6 விமானங்கள் பறந்திருந்தன.

v. கட்டுநாயக்கா இ.வி.ப. தளத்திலிருந்து வண்ண விருது வழங்கல் விழாவில் நான்கு K-8 விமானங்கள் அணிவகுத்துப் பறந்திருந்தன. 2018 ஏப்ரலில் AVIC Hongdu China இல் MW PT 6 விமானத் தொழிற்சாலை ஏற்பனவு முன்னெடுக்கப்பட்டது.






vi. 2018 யூலையில் வீரவில இ.வி.ப. நிலையத்திலிருந்து சிறிய விமானப் படைக் கண்காட்சிக்காக மூன்று PT-6 விமானங்கள் அணிவகுத்துப் பறந்திருந்தன.

vii. கட்டுநாயக்கா இ.வி.ப. தளத்திலுள்ள AEW இல் ஆறு புத்தம்புதிய PT 6 விமானங்களின் பொருத்துகை முன்னெடுக்கப்பட்ட துடன் 2018 அக்டோபரில் கட்டுநாயக்கா இ.வி.ப. தளத்தில் உள்ள AEW இல் ஆறு PT6 விமானங்களை வெள்ளோட்டம் விடுவதற்கான பொதுவான மேம்படுத்தல்களும் பூர்த்தி செய்யப்பட்டன.





viii. 2018 அக்டோபர் தொடக்கம் நவெம்பர் வரையான காலப்பகுதியில் பொருத்தப்பட்டு மேம்படுத் தல்களும் பூர்த்தியானதன் பின்னர் CATIC சீனாவில் இருந்து கட்டுநாயக்கா இ.வி.ப. தளத்திலுள்ள பயன்பாட்டு அமைப்பு யுநுறு இற்குக் ஆறு புதிய PT-6 விமானங்கள் கிடைக்கப்பெற்றன.

ix. 2018 நவெம்பர் தொடக்கம் டிசெம்பர் வரை ஆறு PT-6 விமானங்களின் வெள்ளோட்டத்திற்காக புதிய புகை பிறப்பித்தல் முறைமை மேம்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது.

**(h)** 2018 ஆம் ஆண்டில் விமானம் மற்றும் விமான சேவையுடன் தொடர்புடைய நடவடிக்கைகளின் அபிவிருத்தி – 02 ஆம் இலக்க படையணி

| தொ.இல. | விபரம் | சுத்திகரிப்பு வகை | காலம் |
|---|---|---|---|
| 01 | SCH880<br>C-130 | Propeller Root Seal Replace (S/no N 235086,N226115) | 06.06.18<br>தொடக்கம்<br>14.06.18 |
| 02 | SCH880<br>C-130 | KTR 908 VHF தொடர்பாடல் முறைமை மேம்படுத்தல் | 03.07.18 |

**(j)** 2018 ஆம் ஆண்டில் விமானம் மற்றும் விமான சேவையுடன் தொடர்புடைய நடவடிக்கைகளின் அபிவிருத்தி – 04 ஆம் இலக்க படையணி

APU இக்னீசியன் சுற்று மின்னோட்ட சக்தி சோதனை கருவி

APU இக்னீசியன் சுற்று மின்னோட்ட ஆழ் சோதனை கருவியானது எம்ஜ – 17 ரக விமானத்தின் APU இக்னீசியன் சுருள் மற்றும் இக்னிட்டர் பிளக் இன் சேவைத்தரத்தைத் தீர்மானிப்பதில் படையணிக்கு பாரியளவில் உதவுகிறது. AN-9B APU இன் MM இன்படி, இக்னீசியன் சுருள் மற்றும் இக்னிட்டர் பிளக் என்பன ஒவ்வொரு 500 இயக்க ஆரம்பிப்பின் பின்னரும் சோதிக்கப்பட வேண்டும் என்பதுடன், தேவையாயின், மின்னோட்ட சக்தியானது சீராக்கல் திருகாணியினால் சீராக்கப்படல் வேண்டும். இந்த R&D செயற்றிட்டத்திற்கு முன், அத்தகைய வசதிகள் கிடைக்கப்பெறவில்லை. மேலும், தடங்கல்களைச் சீர்படுத்தும்போது, பாகங்கள் APU இற்குப் பொருத்தப்பட்ட அதே நேரம் இக்னீசியனும் சோதனை செய்யப்பட்டது. இந்த நடைமுறை அபாயகரமானதாகவும் வினைத்திறனற்றதாகவும் விளைவுத்திறன் அற்றதாகவும் இருந்தது.




எனவே APU இற்கு உருப்படிகள் பொருத்தப் படும்போதே அதே முறையிலான வயரிங் கிடைப்படம் மற்றும் தொழிற்பாடுகளுக்கு ஏற்ப இந்தச் சோதனைக் கருவி தயாரிக்கப்பட்டது. இந்தச் சோதனை கருவியால் மினனோட்ட வாசிப்புகள் பெறப்படுவதுடன் இக்னீசியனின் சக்தியினை சோதிப்பதும் தொழில்நுட்பவியலாளர்களுக்கு இலகுவானதாக இருக்கிறது.

**(k)** 2018 ஆம் ஆண்டில் விமானம் மற்றும் விமான சேவையுடன் தொடர்புடைய நடவடிக்கைகளின் அபிவிருத்தி – 06 ஆம் இலக்க படையணி

நீண்டகால அடிப்படையில் SMH-588 MI-171V உலங்கு வானூர்தியின் மீள்கட்டுமானச் செயன்முறை முன்னெடுக்கப்பட்டதுடன் MINUSCA இற்கும் அனுப்பப்பட்டது.

i. MI-17 உலங்குவானூர்தியின் மாற்றீடு – ஐ.நா. பணி UNMISS.



ii. MI-17 உலங்குவானூர்தியின் மாற்றீடு – ஐ.நா. பணி MINUSCA.



iii. MI-171Sh உலங்குவானூர்தியைக் கொண்டு வானிலிருந்து தரையை நோக்கிச் சுடும் நடவடிக்கை



iv. மிஹிந்தலையில் நடத்தப்பட்ட காவிச்செல்லல் நடவடிக்கை





v. SMH-4424 MI-171E உலங்குவானூர்தியின் மீள்கட்டுமானச் செயன்முறை



## (l) 2018 ஆம் ஆண்டில் 08 ஆம் இலக்க படையணியின் விமானம் மற்றும் விமானப் போக்குவரத்து தொடர்பான நடவடிக்கைகளின் அபிவிருத்தி

| தொ. இல. | விபரம் | குறிப்பு | பணப் பெறுமதி |
|---|---|---|---|
| 01 | SMR -843 B-200 விமானத்தின் உட்பகுதி மற்றும் வெளிப்பகுதி நிலைமைகளின் மேம்படுத்தல் | முன்னெடுக்கப்பட்ட மீள் தீந்தை பூசும் நடவடிக்கை நிறைவடைந்துள்ளதுடன் உட்பகுதி நிலைமை மேம்படுத்தப்பட்டுள்ளது | அண்ணளவாக ரூ. 250,000.00 |




(m) 2018 ஆம் ஆண்டில் விமானம் மற்றும் விமான சேவையுடன் தொடர்புடைய நடவடிக்கைகளின் அபிவிருத்தி – 09 ஆம் இலக்க படையணி

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில், 09 ஆம் இலக்க படையணி எம்ஐ – 17 ரக விமானங்களை ஈடுபடுத்தி பல தொழிற்பாடுகளை நிகழ்த்தியிருந்தது. விபரம் பின்வருமாறு :

i. பரசூட்டுடன் குதித்தல், இ.வி.ப. தியத்தலாவை
ii. பரசூட்டுடன் குதித்தல், இ.வி.ப. வீரவில (சிறிய கண்காட்சி)
iii. பரசூட்டுடன் குதித்தல், விசேட அதிரடிப் படை
iv. பரசூட்டுடன் குதித்தல் மற்றும் சாகசப் பயிற்சி, இ.வி.ப. தியத்தலாவை.
v. பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், கடற்படை SBS.
vi. பரசூட்டுடன் குதித்தல் ஒத்திகைகள், இ.வி.ப. அம்பாறை
vii. பரசூட்டுடன் குதித்தல், இலங்கை இராணுவ முகாம் அம்பாறை
viii. இ.வி.ப. மொரவெவ இலிருந்து பயிற்சி முடித்து வெளியேற்றும் வைபவ அணிவகுப்பு


**(n)** 2018 ஆம் ஆண்டில் விமானம் மற்றும் விமான சேவையுடன் தொடர்புடைய நடவடிக்கைகளின் அபிவிருத்தி – 111 ஆம் இலக்க படையணி

வெளிவாரி விமான ஓட்டுநர்களுக்கான பயிற்சித் தேவையினை நிறைவேற்றும் பொருட்டு மாதிரி விமானத் தயாரிப்புச் செயற்றிட்டம் இப்படையணியால் முன்னெடுக்கப்பட்டது. இச்செயற்றிட்டத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட 05 மாதிரி விமானங்கள் தற்பொழுது இப்படையணியில் உள்ளன.

(p) 2018 ஆம் ஆண்டில் விமானம் மற்றும் விமான சேவையுடன் தொடர்புடைய நடவடிக்கைகளின் அபிவிருத்தp – வானூர்திப் பொறியியல் பிரிவு (AEW)

i. <u>சுழலிப் பகுதி</u>

புதிய TAB de-lamination prevention special fixture தயாரிப்பு



ii. <u>பாதுகாப்புப் பகுதி</u>

கேள்வி முறைமை மற்றும் பாதுகாப்புப் பகுதியில் புதிய உள்நுழைவுக் கதவு நிறுவலுக்கு வசதியளிப்பதற்காக EPAS அணுக்கம் வழங்கப்பட்டது.



iii. <u>என்ஜின் பகுதி</u>

(i) AGB housing இன் அகற்றல் மற்றும் நிறுவலுக்கான இயலுமை மேம்படுத்தப்பட்டது.



(ii) புதிய அவசரநிலை எல்ஈடி லைற் பொருத்தப்பட்டது



(iii) என்ஜின் / RGB இன் சுமையேற்றல் மற்றும் சுமையிறக்கலுக்காக புதிய Hands Tracker இன் கொள்வனவு




iv. <u>கருவிப் பகுதி</u>

புதிய பயிற்சி பிரதேசத்தின் தயாரிப்பு




v. <u>தொழில்நுட்பத் திட்டமிடல் மற்றும் ஆவணங்கள் பகுதி</u>

வலையமைப்பு இயல்திறனை மேம்படுத்துவதற்காக 3U rack பதிலாக புதிய 7U Rack மாற்றீடு



vi. இணைந்த பகுத

UAV HS 2034 தரையிறங்கல் கியர் முறைமையின் தயாரிப்பு



vii. நியம அறை

ISO 17025 நியமங்களின்படி வெப்பநிலை மற்றும் ஈரப்பதன் மட்டங்களைப் பேணுவதற்காக நியம அறையில் இரட்டைக் கதவு முறைமையொன்று தாபிக்கப்பட்டது.



## (q) 2018 ஆம் ஆண்டில் விமானம் மற்றும் விமான சேவையுடன் தொடர்புடைய நடவடிக்கைகளின் அபிவிருத்தி – வானூர்திப் பொறியியல் ஆதரவுப் பிரிவு (ASW)

i. விமான உதிரிப்பாக பல நோக்கு குறைபாடுகளை பகுப்பாய்வு செய்யும் கருவியின் தயாரிப்பு. (E&I பட்டறை). இதற்கான மொத்தக் கிரயம் ரூ. 22,000.00

ii. உதிரிப்பாகப் பட்டறை - Y-12 விமானத்தை சுத்தம் செய்யும் இயந்திரம்

iii. எஞ்ஜின் பட்டறை - C-150 விமான எஞ்ஜின் உசயமௌாயகவ யனதரளவயடிடந run-out சோதனைக் கருவி. இதற்கான மொத்தக் கிரயம் ரூ. 14,000.00.

ஷை. விமான இறக்கை பட்டறை - Retention bearing puller. இதற்கான மொத்தக் கிரயம் ரூ. 8,000.00

v. 3D பிறின்டரின் தாபிப்பு

(r) 2018 ஆம் ஆண்டில் விமானம் மற்றும் விமான சேவையுடன் தொடர்புடைய நடவடிக்கைகளின் அபிவிருத்தி – விமானப் படை அருங்காட்சியகம் (AFM)

i. Bolton Paul Balliol கண்காட்சி விமானம்

முன்பு பின்பு





மொத்தக் கிரயம் ரூ. 28,800.00

ii. <u>CT-131 SF-260 SIAI Marchetti கண்காட்சி விமானம்</u>

முன்பு பின்பு





மொத்தக் கிரயம் ரூ. 12,000.00

iii. Camov KA-26 கண்காட்சி உலங்குவானூர்தி

முன்பு பின்பு





மொத்தக் கிரயம் ரூ. 18,000.00

iv. CT-128 SF-260 SIAI Marchetti கண்காட்சி விமானம்

முன்பு பின்பு






மொத்தக் கிரயம் ரூ. 19,000.00

v. Douglas DC-3 Dakota கண்காட்சி விமானம

முன்பு பின்பு







மொத்தக் கிரயம் ரூ. 39,000.00

vi. MI -24 கண்காட்சி உலங்குவானூர்தி

முன்பு பின்பு





மொத்தக் கிரயம் ரூ. 32,000.00

vii. Mig-27 விமானம் - மொரட்டுவை பல்கலைக்கழகம்

முன்பு | பின்பு





மொத்தக் கிரயம் ரூ. 32,000.00

viii. தொடக்கநிலையாளர்களின் நிகழ்ச்சித்திட்டத்திற்கான விமானப் போக்குவரத்து அடிப்படைகள்





**(s)** 2018 ஆம் ஆண்டில் விமானம் மற்றும் விமான சேவையுடன் தொடர்புடைய நடவடிக்கைகளின் அபிவிருத்தி – (AOW)

i. PT – 6 விமானத்திற்கான முழுமைத் திருத்த வசியின் தாபிப்பு

SBT-187 விமான முழுமைத் திருத்தம் நடைபெறுகின்றது. SBT-1162 விமானத்தின் முழுமைத் திருத்தம் நிறைவடைந்துள்ளதுடன் எஞ்ஜின் கிடைக்காததால் தரை ஓட்டம் மற்றும் வான் சோதனை என்பவற்றை நடத்துவதற்கு காத்திருக்கப்படுகிறது.





ii. F-7 மற்றும் K-8 விமானங்களுக்கான பாகங்களின் முழுமைப் பழுதுபார்ப்பு வசதியைத் தாபித்தல்

(i) F-7 மற்றும் K-8 விமானப் பாகங்களின் முழுமைப் பழுதுபார்ப்புப் பயிற்சி வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது.




(ii) Y-12 விமானத்திற்கான முழுமைப் பழுதுபார்ப்பு வசதியைத் தாபித்தல்




(iii) F-7 விமானத்திற்கான முழுமைப் பழுதுபார்ப்பு வசதியைத் தாபித்தல். SFT-705 மற்றும் SFI- 780 F-7 விமான முழுமைப் பழுதுபார்ப்பு வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது.




(iv) K-8 விமானத்திற்கான முழுமைப் பழுதுபார்ப்பு வசதியினைத் தாபித்தல்




(v) பாலவி இ.வி.ப. நிலையத்தில் மேற்பரப்பு பரிகரிப்பு ஆலையைத் தாபித்தல்பாலவி இ.வி.ப. நிலையத்தில் ஒப்புதலளிக்கப்பட்ட திட்டத்திற்கு இணங்க மேற்பரப்பு பரிகரிப்பு ஆலை மற்றும் உபரி நீர் தூய்மைப்படுத்தல் ஆலை என்பவற்றின் நிருமாணம் நிறைவு செய்யப்பட்டது. மேலும் உபகரணத்தின் நிறுவலும் பூர்த்தி செய்யப்பட்டதுடன் இறுதிப் பரிசோத னைக்கும் அதிகாரம் வழங்கவும் காத்திருக்கப்படுகிறது.




(t) 2018 ஆம் ஆண்டில் விமானம் மற்றும் விமான சேவையுடன் தொடர்புடைய நடவடிக்கைகளின் அபிவிருத்தி – ஏக்கல தொழிற் பயிற்சிப் பாடசாலை

i. பயிற்சி வளங்களாக காட்சிப்படுத்தல் மற்றும் நடைமுறைப் பயிற்சி ஆகிய நோக்கங்களுக்காக SBT- 1610 PT – 06 இன் பழுதுபார்க்கப்பட்டது. இந்தச் செயற்றிட்டம் ர்வுவுஊ பயிற்சியுடன் பிரதானமாக விமானச் சட்டக தொழில்நுட்பவிய லாளர்களினதும் ஏனைய விமானம்சார்ந்த தொழிலிலுள்ளவர் களினதும் பயிற்சித் தேவைகளை நிறைவேற்றுகிறது. இது அடிப்படையான விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் மற்றம் விமானப் போக்குவரத்துச் செயற்பாடுகள் மற்றும் விமானப் பராமரிப்பின் அவற்றின் பயன்பாடுகள் ஆகியவற்றுடன் தொடர்புடைய பயிற்சிகளை வெளிப்படுத்துவதற்கு இயலச் செய்கிறது.

ii. மேலும் ஏக்கலயிலுள்ள இ.வி.ப. தொழிற்பயிற்சிப் பாடசாலை யின் கண்காட்சிப் பிரிவில் பழுதுபார்க்கப்பட்ட PT-6 விமானம் காட்சிப் படுத்தப்படும். இச்செயற்றிட்டத்திற்கான கிரயம் ரூ. 54,200.00 ஆகும்.






**(u)** ஏக்கலயிலுள்ள இ.வி.ப. தொழிற்பயிற்சிப் பாடசாலையில் விமானங்களை நிறுத்திவைப்பதற்கான தள நிருமாணம்

இந்தத் தரிப்பிட தளமானது தொழிற் பயிற்சி மற்றும் ர்வுவுஊ பயிற்சி ஆகிய இரண்டு வகைப் பயிற்சி நோக்கங்களுக்கும் பயன்படுத்தப்படு கின்ற தற்போதுள்ளதும் புதிதாக வரவழைக்கப்பட்டு சேவையிலீடுபடுத்தப்படாது இருக்கின்ற விமானங்களை நிறுத்தி வைப்பதற்கான வசதியினை வழங்குவதற்காக நிருமாணிக்கப்பட்டது. இந்நிருமாணச் செயற்றிட்டத்திற்கான செலவு இல.ரூ. 254,200.00 ஆகும்



**(v)** விமானப் போக்குவரத்து விடயங்களுக்கு விமான முறைமைகள் மீதான எல்.ஈ.டி. காட்சித்திரை பலகமும் காணொளிகளும்

விமான முறைமைகள் மீது தயாரிக்கப்பட்ட சுப்பர் பைன் காணொளிகள் தற்போது ஒன்லைன் சந்தைகளில் கிடைக்கக்கூடியதாக இருக்கிறது. இந்தக் காணொளிகள் புகழ்பெற்ற பயிற்சி முகராண்மை களால் நிருமாணிக்கப்பட்டவை ஆகும். இந்தப் பாடசாலை பயிற்சி உதவியளிக்கக்கூடிய அத்தகைய நிலைகளிலான காணொளிகளுக்கு பற்றாக்குறை நிலவுகிறது. எல்.ஈ.டி. திரை ஒன்றுடன் விமான முறைமைகள் மீதான காணொளிகள் உள்ளடங்கலாக தொழிற் பயிற்சி மற்றும் HTTC பயிற்சி ஆகிய இரண்டிற்குமான பயிற்சி உதவிகளைச் செய்வதன் மூலம் சொல்லப்பட்ட தேவையினை இச்செயற் றிட்டம் குறைந்தளவில் பூர்த்தி செய்கிறது. இச்செயற்றிட்டத்திற்கான மொத்தச் செலவு இல.ரூ. 42,000.00 ஆகும்.



**(x)** 2018 ஆம் ஆண்டின் நடவடிக்கைத் திட்டத்திற்கு எதிரான உண்மையான செயலாற்றுகை

i. விமானங்களின் கொள்வனவு வானூர்திப் பொறியியல் பணிப்பகம் 2018 ஆம் ஆண்டின் மூலதனச் செலவினத்தின் கீழ் விமானக் கொள்வனவுக்காக இல.ரூ. 100,869.50 மில்லியனை பாதிட்டிருந்தது. எவ்வாறாயினும் இதில் இல.ரூ. 837.34 மில்லியன் பெறுமதியான செலவினம் விமானக் கொள்வனவு தொடர்பான மூலதனச் செலவின வடிவில் உறப்பட்டிருந்தது.

(i) இது 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இ.வி.ப. இனால் இல.ரூ. 567.87 மில்லியன் பெறுமதியான PT – 6 விமானங்கள் 6 இன் ஏற்பனவை உள்ளடக்கியிருக்கிறது.

(ii) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கையைப் பூர்த்தி செய்து அங்கீகாரத்திற்காக அவ்வறிக்கை பாதுகாப்பு அமைச்சின் அமைச்சரவை அங்கீகரித்த பெறுகைக் குழுவின் (SCAPC) பார்வைக்கு அனுப்பப் பட்டதன் காரணமாக யின் பூர்த்தி காரணமாக பல்வகை வகிபாகங்களை கொண்டுள்ள யுத்த விமானங்களின் கொள்வனவு நடவடிக்கை இடம்பெற்றுக்கொண்டிருந்தது.

(iii) இரண்டு C-130 விமானங்களின் கொள்வனவு

(iv) இரண்டு IL-76 விமானங்களின் கொள்வனவு

(v) UAV விமானம் மற்றும் தரை நிலையத்தின் கொள்வனவு

(vi) ஆறு ஹெலிகெப்டர் பயிற்சிப் போலிகள் கொள்வனவு.

(vii) பாதுகாப்பு அமைச்சின் ஒப்புதல் காத்திருப்பதன் காரணமாக இரண்டு VVIP ஹெலிகொப்டரின் கொள்வனவு, செயற்பாட்டிலிருக்கிறது.

ii. விமான உதிரிப்பாகங்களின் கொள்வனவு 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில், பணிப்பகமானது மூலதனத் தன்மை யிலான எஞ்ஜின், இறக்கை மற்றும் கருவிகள் ஆகியவை உள்ளிட்ட விமான உதிரிப்பாகங்களின் கொள்வனவுக்காக இல.ரூ. 457.06 மில்லியனை பாதீடு செய்திருந்தது.

(i) இதில், மூலதனத் தன்மையிலான இல.ரூ. 216.22 மில்லியன் பெறுமதி கொண்ட உதிரிப்பாகங்களின் கொள்வனவு வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டிருக் கிறது. இதில் பிரதானமாக இல.ரூ. 44.34 மில்லியன் பெறுமதியைக் கொண்ட MI-17 ரக விமானங்களுக்கான வால்ப்பகுதி சுழலிகள் இரண்டு மற்றும் இல.ரூ. 60.46 மில்லிய் பெறுமதியைக் கொண்ட பிரதான சுழிலி பிளேட்டுகள் இரண்டு என்பன உள்ளடங்குகின்றன.

(ii) மேலும், 61 விமானப் போக்குவரத்துகளுக்காக இல.ரூ. 30.23 மில்லியன் பெறுமதி கொண்ட MI-17 ரக விமானங்களின் பிரதான சுழலி பிளேட் தொகுதியும் AN32B விமானத்திற்கான இல.ரூ.22.99 மில்லியன் பெறுமதியான இறக்கையும் மூலதனத் தன்மையிலான உதிரிப்பாகங்களின் வடிவில் கொள்வனவு செய்யப் பட்டன.

(iii) மேலுள்ளவற்றக்கு மேலதிகமாக பணிப்பகமானது 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏனைய மூலதன தன்மையிலான உதிரிப்பாகங்களின் கொள்வனவுக்கு இல.ரூ. 58.20 மில்லியனைச் செலவு செய்திருந்தது.

(iv) விநியோகத் திற்கான காத்திருப்பு, நி.ஒ.வி. 136 அங்கீகாரம் நிலுவையிலிருத்தல் ஆகியவை காரணமாக 2018 ஆம் ஆண்டின் இறுதியில் திட்டமிடப்பட்ட மொத்த மூலதன உதிரிப்பாகக் கொள்வனவில் இல.ரூ. 57.48 மில்லியன் பெறுமதியான மூலதன உதிரிப்பாகக் கொள்வனவானது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

(v) மீதி இல.ரூ. 148.02 மில்லியன் பெறுமதியான மூலதன உதிரிப்பாகக் கொள்வனவுகள் பல்வேறு காரணங்களால் இடம்பெறவில்லை.

iii. விமான உதிரிப்பாகக் கொள்வனவும் பராமரிப்பும் 2018 ஆம் அண்டின் ஆரம்பத்தில், பணிப்பகமானது மீண்டுவரும் வகையின் கீழான விமான உதிரிப்பாகக் கொள்வனவுகள் மற்றும் விமானப் பராமரிப்புகள் ஆகியவற்றிற் காக இல.ரூ. 4,736.74 மில்லியனைப் பாதிட்டிருந்தது. இதில், இல.ரூ. 1,487.07 மில்லியன் பெறுமதியான விமான உதிரிப் பாகங்களின் கொள்வனவு மற்றும் பராமரிப்புகள் 2018 ஆம் ஆண்டின் காலப்பகுதியில் இ.வி.ப. இனால் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன. இது பிரதானமாக பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தது.

(i) இல.ரூ. 66.98 மில்லியன் பெறுமதியான AEFT பாகங்களின் கொள்வனவு

(ii) இல.ரூ. 60.01 மில்லியன் பெறுமதியில் பெல் 412 ரக விமானத்தின் கரநட ழெணணடந எழுப்பதிரெண்டு (72) மாற்றீடு செய்யப்பட்டது.

(iii) ஒவ்வொன்றும் இல.ரூ. 48.56 மில்லியன் பெறுமதி யில் 04 ஆம் இலக்கப் படையணிக்கும் 07 ஆம் இலக்கப் படையணிக்கும் அனர்த்த முகாமைத்துவத்திற் கான உள்ளக இடர்மீட்பு உயர்த்திகள் இரண்டு கொள்வனவு செய்யப்பட்டன.

(iv) இல.ரூ. 40.56 மில்லியன் பெறுமதியான ருயுஏ ஆய்வு மற்றும் அபிவிருத்திச் செயற்றிட்டம் கொள்வனவு செய்யப்பட்டது.

(v) மேலும், இல.ரூ. 1,175.41 மில்லியன் பெறுமதியான மீண்டுவரும் தன்மையின் கீழான விமான உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டின் இறுதியில் பராமரிப்பு வேலைகளும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இதற்கான காரணங் களாக ஆண்டின் ஆரம்பத்தில் இவற்றை நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், பகுதியளவில் பெறப்பட்ட பொருட்கள், விநியோகக் காத்திருப்பு, திணைக்களப் பெறுகைக் குழுவின் அங்கீகாரத்திற்கான காத்திருப்பு, மதிப்பீடுகள் நிலுவையிலிருந்தமை என்பன காணப்பட்டன.

(vi) மேலுள்ளவற்றுக்கு மேலதிகமாக, இல.ரூ. 2,074.26 மில்லியன் பெறுமதியான விமான உதிரிப் பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் இரத்துச் செய்தல், விநியோகம் காலாவதியாதல் போன்ற பல்வேறு காரணங்களால் பராமரிப்பு வேலைகள் முன்னெடுக்கப்படவில்லை.

vi. பழுதுபார்ப்பும் முழுமைத் திருத்தமும் (வாக்கு 2002)

வானூர்திப் பொறியியல் பணிப்பகமானது 2018 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலும், 2018 ஆம் ஆண்டின் இறுதியிலும் இல.ரூ. 8,233.28 மில்லியனைச் செலவிட்டு, மூலதனச் செலவின் கீழ் விமானங்களின் பழுதுபார்ப்பு மற்றும் முழுமைத் திருத்தங்களைச் செய்வதற்குத் திட்டமிட்டிருந்தது. பணிப்பகம் பின்வருவனவற்றை உள்ளடக்கியதான இல.ரூ. 266.88 மில்லியன் செலவில் பழுதுபார்ப்பு மற்றும் முழுமைத் திருத்தம் ஆகியவற்றை முன்னெடுத்திருந்தது.

(i) MA-60 விமானத்திற்கு இல.ரூ.105.00 மில்லியன் பெறுமதியில் எஞ்ஜின் பழுதுபார்ப்பும் முழுமைத் திருத்தமும் மேற்கொள்ளப்பட்டது.

(ii) Bell-212 உலங்குவானூர்திக்கு இல.ரூ.48.74 மில்லியன் பெறுமதியில் மின் தொகுதி பழுதுபார்ப்பும் முழுமைத் திருத்தமும் மேற்கொள்ளப்பட்டது.

(iii) MI-17 உலங்குவானூர்திக்கு இல.ரூ.31.19 மில்லியன் பெறுமதியில் ஆபுடீ பழுதுபார்ப்பும் முழுமைத் திருத்தமும் மேற்கொள்ளப்பட்டது.

(iv) SFI-705 F-7BS விமானத்தின் பாகங்களுக்கு இல.ரூ. 30.08 மில்லியன் பெறுமதியில் மேற்பரப்பு பழுதுபார்க்கப்பட்டது.

(v) C-130 விமானத்திற்கு இல.ரூ.22.18 மில்லியன் பெறுமதியில் விசையாழித் தொகுதியில் பழுதுபார்ப்பும் முழுமைத் திருத்தமும் மேற்கொள்ளப்பட்டது.

(vi) C-130 விமானத்திற்கான இறக்கை இல.ரூ.16.93 மில்லியன் பெறுமதியில் பழுதுபார்ப்பும் முழுமைத் திருத்தமும் செய்யப்பட்டது.

(vii) MI-17 உலங்குவானூர்த்திக்கான வால்பகுதி சுழலியின் குடம் இல.ரூ.12.76 மில்லியன் பெறுமதியில் பழுதுபார்ப்பும் முழுமைத் திருத்தமும் செய்யப்பட்டது.

